பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

26.05.2010 - மலர் 07, இதழ் 12



## மகத்துவம் மிக்க வெசாக் தினம்

## இடி, மின்னல் விமானங்களைத் தாக்குமா?

## வேற்றுக்கிரக வாசிகளால் பேராபத்தா?

## இது உயிரியல் பல்வகைமை வருடம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பிரதிநிதியாகிய முதலாம் அதிகாரம்

விமலதர்ம சூரிய மன்னனுக்கு 500 கறுவா மூட்டைகள் சங்கத்தால் வழங்கப்பட வேண்டும் என தூதுவர்கள் கூறினர். அதற்கு ஆள்பதியோ தமது எதிர்ப்பை வெளிப் படுத்தினார். விருப்பமாயின், மன்னனுக்குச் சொந்தமான கறுவா மற்றும் பாக்கு என்பனவற்றைத் தமக்கு விற்கும்படி கூறினார். இதற்குத் தூதுவர்கள் பதில் கூறாது. உயர்குடிகள் கவனிக் கப்பட்ட வேண்டியவர்கள் என்றும் அவர்கள் திருகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு மற்றும் கல்பிட்டி ஆகிய இடங்களை மீண்டும் கேட்கிறார்கள் என்றும் கூறினர். இதனால், பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டது. அவர்கள் மீண்டும் திரும்பிச் சென்றனர்.

சில நாட்களின் பின் வேறு ஒரு குழுவுடன் முதலாம் அதிகாரம் அவர்கள் கொழும்புக்கு வந்தார். கி.பி 1665 முதல் கைப்பற்றிய பிரதேசங்களையும் துறைமுகங்களையும் விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஒரு சந்தர்ப்பத்தில் அந்த இடங்களைக் கையளிப்பதற்கு ஒல்லாந்தர் எண்ணி இருந்தனர். எனினும், இம்முறை அதற்கு இணங்கவில்லை. தமக்கு அதில் உடன்பாடில்லை என்பதைத் தெரியப்படுத்தினர். இச்சந்தர்ப்பத்தில் ஆள்பதி அவர்கள் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன் தொகை குறித்து நினைவுபடுத்தினார். அதற்கு அதிகாரம் அவர்கள் எவ்வித பதிலும் அளிக்காமல் மௌனமாக இருந்தார்.

கி.பி 1688 இல் ஒல்லாந்த ஆலோசனை சபை மன்னனுடன் ஒப்பந்தத்தில் ஈடுபடவேண்டும் என்ற ஆலோசனை ஒன்றை முன் வைத்தது. மட்டக்களப்பு, திருகோணமலை, கல்பிட்டி ஆகிய பிரதேசங்களைக் கொடுப்பதற்கு ஆள்பதி வேன்ரிட் அவர்கள் விரும்பாத போதிலும் கப்பல் போக்குவரத்திற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தார். அதேபோல் கறுவா மற்றும் பாக்கு வர்த்தகம் சம்பந்தமான ஏகபோக உரிமையை வழங்கவேண்டும் என்ற நிபந்தனை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தவும் அவர் முயற்சித்தார். ஒப்பந்தப் பத்திரத்தின் பூர்வாங்க நகல் ஒன்றை பிரதிநிதிகளின் குழுவிற்கு காண்பிப்பதற்கு 'க்லாஸ் எப்லோஸ்' எனும் செயலாளருக்கு கட்டளையிடப்பட்டது. இந்நடவடிக்கைகளை அச்சமின்றி நிறைவேற்றவும் நெகிழுந்தன்மை இல்லாமல் உறுதியைக் கடைப்பிடிக்கவும் எந்த ஒரு துறைமுகத்தையும் வழங்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவரின் கடமையாக இருந்தது. அதேபோல் எது எப்படி நடந்தபோதிலும் ஒல்லாந்த வர்த்தக சங்கம் கடலோரப் பிரதேசங்களில் தமது ஆட்சியைக் கைவிடுவதில்லை என்பதை உறுதியாகத் தெரிவிக்கும்படியும் பணிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளது



தேசிய பாடசாலைகளில் ஆசிரிய இடமாற்றங்கள் கல்வி அமைச்சரின் உத்தரவுக்கமைய கடந்த 11 ஆம் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலைகளில் ஆசிரிய இடமாற்றங்கள் அரசியல் தேவைகளுக்கமைய இடம்பெறுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டினைக் கவனத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, தேசிய பாடசாலைகளில் ஆசிரிய இடமாற்றம் குறித்து உரியமுறையில் ஆராயப்படும் வரை ஆசிரிய இடமாற்றங்களை இடைநிறுத்தும்படி கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# 62 தேசிய பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

62 தேசிய பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதளவில் 62 தேசிய பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாகவும், அவற்றில் குறித்த பணிகளை பதில் அதிபர்களே நிறைவேற்றி



வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, அந்தப் பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. அவற்றினூடாக தகைமை பெற்ற, தேர்ச்சிமிக்க அதிபர்களை தெரிவுசெய்து, குறித்த பாடசாலைகளுக்கு அதிபர்களாக நியமிக்கப்படுவர் என கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெப்ரவரியிலிருந்து மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படவில்லை

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் தரம் 1 இலிருந்து தரம் 5 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான மதிய உணவு வேலைத்திட்டம் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக



அறியக்கிடைத்துள்ளது.

மதிய உணவு வழங்குவதற்கான மாதாந்த நிதி, கடந்த ஜனவரி மாதத்தின் பின்னர் அநேகமான பாடசாலைகளுக்கு வழங்கப்படாமையினாலேயே மேற்படி மதிய உணவு வழங்கல் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மதிய உணவினைப் பெற்றுக்கொடுப்பதற்காக பாடசாலையொன்றுக்கு மாதாந்தம் சுமார் ரூபா 60,000 வழங்கப்பட்டதோடு, சமுர்த்தி அதிகாரிகளே உணவு விநியோகத்தை மேற்கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# குளிரூட்டியில் விளைச்சல்



குளிரூட்டி (குளிர்சாதனப் பெட்டி) பொதுவாக காய்கறிகள், உணவுப் பண்டங்களைப் பதப்படுத்தி வைக்கவே பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், தற்போது சமையலுக்குத் தேவையான காய்கறிகளைப் பயிரிட்டு வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ற வகையிலான குளிரூட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. காய்கறிகள் மட்டுமன்றி, கடல் உணவுகளான மீன், நண்டு போன்றவற்றையும் இதில் வளர்க்க முடியும்.

இந்த குளிரூட்டி பல அடுக்குகளைக் கொண்டிருக்கும். மேற்புறமாக உள்ள அடுக்குகளில் காய்கறிகளை வளர்த்துக் கொள்ளலாம். அதற்குத் தேவையான சகல வசதிகளும் அப்பகுதியில் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், கீழ்ப்பகுதியில் உள்ள அடுக்கில் மீன்கள், நண்டுகளையும் வளர்க்கலாம்.

மேல் அடுக்கில் தாவரங்கள் வளர்க்கும் பகுதியிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுகள் கீழ் அடுக்கை வந்தடைவதற்கான அமைப்புகள் இதில் செய்யப்பட்டுள்ளன. எனவே, இவை மீன்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்துவிடும். தவிர, எஞ்சும் மேலதிக கழிவுகளைக்கொண்டு எரிபொருள் தயாரிக்கவும் முடியும். அந்த எரிபொருளைக்கொண்டு ஒரு காரை இயக்கவும் முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குளிரூட்டியை 'ஃபிலிப்ஸ்' நிறுவனம் தயாரித்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் நமக்குத் தேவையான ஆரோக்கியமான காய்கறிகளையும் கடல் உணவுகளையும் சமையலறையிலேயே உற்பத்தி செய்துகொள்ளலாம்.

# பகிடிவதை இடம்பெறுமாயின் 119 இலக்கத்தினூடாக முறையிடலாம்

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பகிடிவதைகள் இடம்பெறுமாயின் 119



எனும் அவசர தொலைபேசி இலக்கத்தினூடாக பொலிஸாரிடம் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மேற்படி கல்வி நிலையங்களில் பகிடிவதைகள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பொலிஸ் மூலம் நடவடிக்கை எடுக்கமுடியுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

பகிடிவதை மற்றும் ஏனைய வன்முறைகளுக்கு புதிய மாணவர்கள் இலக்காகாமல் இருப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தரம் 1 அனுமதிக்கான புதிய சுற்றுநிருபம்

*தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான புதிய சுற்றுநிருபமொன்றை வெளியிடுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.*

*அதன்படி, இந்த புதிய சுற்றுநிருபத்திற்கமையவே 2011 ஆம் ஆண்டு பாடசாலைகளில் தரம் 1 இற்கு மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்படுவர் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.*



60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

**BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH**

அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)

60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலவச T.Shirt ஒன்றும் Phone Sim English Book என்பன இலவசம்





பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

இலவச Phone Sim

மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்


இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.



THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழைமைமிகு புனிதப்பகுதி தீகவாபி

பௌத்தர்களின் முக்கிய தலங்களான புனிதப் பிரதேசங்கள் பல இலங்கையில் உள்ளன. அவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களாக குறிப்பிடப்படுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தீகவாபிய பிரதேசமும் அத்தகைய ஒன்றாகும்.





கௌதம புத்தர் நான்காவது முறை இலங்கைக்கு வருகை புரிந்தபோது தீகவாபி பகுதிக்கு சென்றதாகவும் அங்கு சிறிது நேரம் ஓய்வெடுத்ததாகவும் 'மகாவம்சம்' குறிப்பிடுகின்றது. இலங்கைக்கு வருகை தந்த ஆரியர்கள் முதலில் குடியேற்றங்களை நிறுவிய பகுதியாகவும் தீகவாபி கருதப்படுகின்றது. ஹத்தகச்சான மன்னனின் சகோதரனான தீகாயு என்ற குமாரனால் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்புப் பிரதேசமே திகாவெவ என்றும் அது பின்னர் தீகவாபிய என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

தீகவாபி மேலும் முக்கியத்துவம் பெறுவது உறுகுனையை ஆண்ட காவன்திஸ்ஸ மன்னன் காலத்தில் ஆகும். சேருநுவர பிரதேசத்தை ஆட்சி செய்த மன்னனுடன் போரிட்டு அப்பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த காவன்திஸ்ஸ மன்னன் அப்பிரதேசத்தை தன் இளைய மகனான சத்தாதிஸ்ஸவிடம் ஒப்படைத்தான். காவன்திஸ்ஸ மன்னன் இறந்தபோது அப்பிரதேசத்தின் அதிகாரம் சத்தாதிஸ்ஸவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சத்தாதிஸ்ஸ மாகமைப் பகுதிக்கு வந்து தனது தாயாரான விகாரமஹாதேவியை சந்தித்துவிட்டு யானையுடன் தீகவாபியவுக்குச் சென்றதாக வரலாறு கூறுகின்றது. அப்போது கெமுனு மற்றும் திஸ்ஸ என்ற சகோதரர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதாகவும் அதனை மகா சங்கத்தினர் தலையிட்டுத் தடுத்ததாகவும் குறிப்புக்கள் கூறுகின்றன.

## சத்தாதிஸ்ஸ இளவரசன்

எல்லாளன் என்ற தமிழ் மன்னனுடன் போரிடச் சென்ற துட்டகைமுனுவுக்கு அப்போருக்குத் தேவையான உணவு விநியோகத்தைக் கவனிப்பதற்காக சத்தாதிஸ்ஸ தீகவாபிக்கு அனுப்பப்பட்டான். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராகக் கருதப்படுகின்றது.

திகாமடுல்லைப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்ட சத்தாதிஸ்ஸ மன்னன் அப்பகுதியில் தாகபை மற்றும் விகாரைகளை நிர்மாணித்ததாகவும் 'மகாவம்சம்' கூறுகின்றது. துட்டகைமுனுவுக்குப் பின் அநுராதபுரத்தை ஆண்ட சத்தாதிஸ்ஸ மன்னன் தீகவாபியை புனிதப் பிரதேசமாக அபிவிருத்தி செய்துள்ளான்.

## அரசனின் பங்களிப்பு

சத்தாதிஸ்ஸ மன்னனின் பின்னர் தீகவாபி பிரதேசத்தை ஆட்சி செய்த மன்னர்கள் அங்கு மேலும் பல புனர்நிர்மாணங்களைச் செய்தனர். அன்பளிப்புக்களைச் செய்தனர். கனிஷ்டதிஸ்ஸ மன்னர் அங்கு அமைக்கப்பட்டுள்ள தாகபைக்கு விலையுயர்ந்த ஆபரணங்கள் அடங்கிய அன்பளிப்பைச் செய்ததாகவும் அவை புதையலாகப் பாதுகாக்கப்பட்டதாகவும் குறிப்புக்களில் உள்ளன.

இரண்டாம் இராஜசிங்க மன்னனும் அங்கு சென்று பூஜை வழிபாட்டில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது. பௌத்த வரலாற்றுக் கிரந்தமான பூஜாவலியில் தீகவாபிப் பிரதேசம் 'தீகநபா' என்று அழைக்கப்படுகின்றது. புத்தரின் புனிதத் தந்தம் பதிக்கப்பட்டு 'தீக நபா வெஹர' என்ற தாகபை நிர்மாணிக்கப்பட்டதாக பூஜாவலியில் குறிப்புக்கள் உள்ளன.

பெருமளவு விஸ்தீரணத்தைக் கொண்ட தீகவாபி பிரதேசத்தில் பல்வேறு விதமான தொல்பொருள் சான்றுகள் கிடைக்கலாம் என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதனால், அங்கு அமைக்கப்பட்டுள்ள தூபி முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

## தாகபை


சுமார் 1000 அடி அளவு சுற்றுவட்ட விஸ்தீரணத்தைக்கொண்ட இந்த தாகபை நூற்றுக்கணக்கான வருடங்கள் பழைமை வாய்ந்ததாகும். அத்துடன், கைவிடப்பட்ட நிலையில் உள்ள இத்தாகபை சிதைவடைந்து மாறுபட்ட தோற்றத்தில் காட்சி தருகின்றது. இந்த தாகபையைச் சுற்றி வட்ட வடிவில் இரண்டு மதில்கள் உள்ளன. அத்துடன், கலை அம்சங்கள் பொருந்திய நான்கு நுழைவாயில்கள் இருந்துள்ளன.

இந்த நுழைவாயில் இடிபாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின்போது தங்கத்தால் ஆன மூன்று புத்தர் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த தாகபையின் உட்புறமாக பூஜை வழிபாட்டுப் பகுதியும் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

மலைநாட்டில் ஏற்பட்ட பாரிய போர் காரணமாக தீகவாபி பிரதேசம் மக்கள் நடமாட்டமற்ற சூன்யப் பிரதேசமாக மாறியுள்ளது. அங்கிருந்து மக்கள் வெளியேறியதால் அப்பகுதி கவனிப்பாரற்று அடர்ந்த காடாகியிருக்கின்றது. இப்பகுதி 1916 ஆம் ஆண்டு கொகுகும்புரே ரேவத தேரரால் கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இவர் 1950 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார்.

இவரே இப்பகுதியில் மக்கள் நடமாட்டத்தை ஏற்படுத்தி 'புனிதப் பிரதேசம்' என்ற முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

(ஆ)



சிதைவடைந்த நிலையில் உள்ள நுழைவாயில்



சந்திரவட்டக்கல்



நுழைவாயில் உள்ள குறிப்பு எழுதப்பட்ட கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி




## முகாமைத்துவம் - 04

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# கற்றல் தொடர்பான கொள்கைகள்

கற்றல் செயன்முறையை மையமாகக்கொண்டு பல்வேறு அறிஞர்கள் அது தொடர்பான தமது கொள்கைகளை வகுத்துள்ளனர். இக்கொள்கைகள் மூலம் அவர்கள் கற்றல் எவ்வாறு ஏற்படுகிறது? என்பது பற்றிய விளக்கங்களை தமது விதிகள், கொள்கைகள், நிபந்தனைகள் மூலம் வெளிக்காட்டுகின்றனர்.

நடத்தைவாத உளவியலாளர்களின் கற்றல் கொள்கையாக 'பழக்கக் கற்றல் அல்லது பயிற்சிக் கற்றல்' (Habit learning) விளங்குகின்றது. கெஸ்டோல்ட் (Gestalt) உளவியலாளர்களின் கற்றல் கொள்கையாக 'உண்மைக் கற்றல்' (True learning) விளங்குகிறது.




#### தோண்டைக்கின் 'தூண்டி துலங்கள்' கொள்கை

கற்றல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை விளக்கும் கொள்கையை முதன்முதலில் வெளியிட்டவர் தோண்டைக் ஆவார். இவர் மிருகங்களில் மேற்கொண்ட ஆய்வினைக் கொண்டு இக்கொள்கையை வெளியிட்டார். தோண்டைக் அவரது பரிசோதனையில் எலிகளையும் பூனைகளையும் பயன்படுத்தினார். முதலில் இவர் பசிகொண்ட ஒரு பூனையை ஒரு பெட்டியில் அடைத்து, அதற்குத் தெரியக்கூடியதாக ஓர் இறைச்சித்துண்டை வெளியில் வைத்தார். பெட்டியைத் திறக்கக்கூடியதாக ஒரு பொத்தானையும் (Button) பெட்டியில் வைத்தார்.



பசிகொண்ட பூனை பெட்டியைத் திறப்பதற்கான பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டது. அப்போது தற்செயலாக அதன் கால் Button இல் பட்டதும் பெட்டி திறந்துகொண்டது. பூனை வெளியில் வந்து இறைச்சியை உண்டது. பின்னர், மீண்டும் பூனையைப் பிடித்துப் பெட்டியில் அடைத்தார். முன்னரைப் போன்றே பூனை பலவாறு முயன்று வெளியில் வந்து இறைச்சியை உண்டது. இவ்வாறு பல நாட்கள் நடைபெற்ற பின்னர், பூனை எவ்வித முயற்சியுமின்றி நேரடியாக Button ஐ அழுத்தி வெளிவரக் கற்றுக்கொண்டது. இக்கற்றலை தோண்டைக் அவர்கள் 'முயன்று தவறிக் கற்றல் முறை' (learning by error of Trial and error method) எனக் குறிப்பிடுகின்றார். இக்கற்றல் முறையிலிருந்து 3 கற்றல் விதிகளை வெளியிட்டார்.



**a) விளைவு விதி (The law of Effect)**

கற்றல் என்பது முறை மற்றும் விளைவு என்ற இரு நிலைகளில் அமையும். ஓர் உயிருக்கு இன்பம், மகிழ்ச்சி அளிக்கத்தக்க எதிர்வினைகள் நிலைநிறுத்திக் கொள்ளப்படுகின்றன. ஓர் உயிருக்குத் துன்பமும் வேதனையும் அளிக்கக்கூடிய எதிர்வினைகள் தள்ளப்படுகின்றன. இதை விளக்கமாகக் கூறினால், நமக்கு மகிழ்வூட்டக்கூடிய செயல்களை நம்முடன் வைத்துக்கொள்ளவும் நமக்குத் துன்பமும் வேதனையும் அளிக்கக்கூடிய செயல்களை ஒதுக்கிவிடவும் அல்லது தள்ளிவிடவும் முயல்கிறோம். இதுவே 'விளைவு விதி' எனப்படும். எனவே, இச்செயல் விளைவின் அடிப்படையில் எழுகிறது. இங்கு விளைவு என்பது நமக்குக் கிடைக்கும் பயன் அல்லது வெகுமதி அல்லது பரிசு இவற்றினைக் குறிக்கிறது. நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் கற்றாலும் அது பயனின் அடிப்படையிலேயே அமைகிறது.

**b) பயிற்சி விதி (The law of Exercise)**

நாம் கற்றுக்கொள்ளும் எந்தச் செயலும் பயிற்சியின் அடிப்படையிலேயே அமைகிறது. ஒரு செயலைத் திரும்பத் திரும்பப் பயிற்சி செய்வதன் காரணமாக அது சிறப்பாக, வெற்றிகரமாக, நிலையாக அமைகிறது. உ+ம்: கார் செலுத்தக் கற்றுக்கொள்ளல், கணிதம் போன்ற பாடங்களைக் கற்றுக்கொள்ளல். எனவே, பயிற்சி விதியின் படி திரும்பத் திரும்பச் செய்து பழக்கப்படுத்திக் கொள்ளப்படும் எந்தவொரு செயலும் சிறப்பாக அமையும் அல்லது சிறப்பாகக் கற்றுக்கொள்ளப்படுகின்றது எனலாம்.

**c) ஆயத்த விதி (The law of Readiness)**

கற்றல் சிறப்பாக அமைய வேண்டுமானால், கற்க முனையும் ஒருவர் தன்னை அதற்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். ஆயத்த நிலை என்பது ஆர்வம், ஊக்கம், விருப்பம் ஆகிய ஒருவரது மனநிலைகளைக் குறிக்கின்றது. ஒருவன் சிறப்பாகக் கற்கவேண்டும் எனில், கற்க வேண்டும் என்ற ஈடுபாடும் விருப்பமும் அவனிடம் இருக்க வேண்டும். உதாரணமாக, மனநிலை சரியில்லாமல் துக்கத்தில் இருக்கும்போதும் தலைவலி, வயிற்று வலி போன்ற உடல்நிலை பாதிப்புகளுக்கு உட்பட்டிருக்கும்போதும் ஒருவனால் சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியாது. எனவே, சிறப்பான கற்றலுக்கு அடிப்படையாக அமைவது ஒருவனுடைய உடல், உள்ளம் இவற்றின் தயார்நிலையாகும்.

(தொடரும்)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா



# சோம்பலைத் துரத்தினால் வெற்றி நிச்சயம்



'வெற்றிக்கு முதல் படி தோல்வி' என்பார்கள். அந்த தோல்விக்கு வழிவகுக்கும் முதல் படியே சோம்பல்தான். எனவே, சோம்பலைத் துரத்தினால் வெற்றி தேடி வரும். சோம்பல் சோகத்தின் கரு. ஆனால், அது ஒரு சுகமான அனுபவம்போலத்தான் தொடங்கும். நீடித்துச் செழித்து வளரும். நமது உடலும் மனமும்கூட சோம்பலையே விரும்பும். இதைப் பல நேரங்களில் நாம் உணர்ந்திருக்கலாம். ஆனால், காலம் தாமதித்துத்தான் அதன் பாதகங்களை நாம் அறியவும் அனுபவிக்கவும் நேரும்.

சோம்பலை வெல்ல வேண்டுமென்றால், மூளைக்கு வேலை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். இலக்கிற்கு நீண்ட காலம் இருந்தாலும் சரி; வெற்றியே உறுதியானாலும் சரி அதனை அடைவதற்கான செயல்களை குறித்த இலக்கை அடையும்வரை தொடர்ந்து கோர்வையாகச் செய்ய வேண்டும். இல்லையென்றால், இடையே சோம்பல் முளைக்கத் தொடங்கிவிடும். வெற்றி திசை திரும்பக்கூடும். எனவே, வெற்றியை விரும்பினால் முதலில் சோம்பலைத் துரத்துங்கள். வெற்றி உங்கள் பின்னால் ஓடிவரும்.



இதேவேளை, சோம்பல் கொண்டவர்கள் மட்டுமா பின்னடைவுகளை சந்திக்கிறார்கள்? என்று நீங்கள் வினவலாம். அதுதான் இல்லை. சோம்பல் இல்லாத சிலரும் வெற்றிப் பாதையில் சில பின்னடைவுகளைச் சந்திக்க நேரலாம். அவர்களின் பின்னடைவுக்கு என்ன காரணம்? என்று நோக்கின், அவர்கள் தமது இலக்கைப் பார்க்கும் கோணமும் அதனை அணுகும் விதமும்தான் தமது பின்னடைவுக்கு காரணம் என்பதை உணரலாம்.

"நான் என்ன செய்தாலும் வெற்றி கிடைக்கவில்லை. அது தள்ளித் தள்ளியே போகிறது" என்று சிலர் கூறுவார்கள். உதாரணமாக; குழந்தைக்கும் கவிஞனுக்கும் விஞ்ஞானிக்கும் அவரவர் நிலையில் சிந்திக்கும்போது ஏராளமான மாறுபாடுகள் இருக்கும். பொதுவான நிலையில் ஒவ்வொருவரும் சிந்திக்கும் கோணம் சரியாக இருந்தால் வெற்றி நிச்சயம். ஆக, நாம் பார்த்த கோணம் சரியானதுதானா? வெற்றியை நோக்கிய பயணத்தில் நமது கோணப் பிழை என்ன? என்பதைப் பற்றி சிந்தித்தாலேபோதும் வெற்றி பெற்றுவிடலாம்.

உதாரணமாக ஒரு குட்டிக்கதையை கேளுங்கள். ஒருவருக்கு மனப்பாடம் செய்வது கடினமாக இருந்தது. அவருக்கு கேட்கும்போது புரியும். ஆனால், புத்தகத்தைப் பார்த்துப் பலமுறை படித்தாலும் மனதில் பதியவில்லை. படிப்பதே கடினமாக இருந்தது. அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எனவே, அவர் படிப்பை நிறுத்திவிட்டார்.

மற்றொருவருக்கும் இதே போன்ற பிரச்சினை இருந்தது. அவரோ டியூசன் வைத்துக் கொண்டார். மனப்பாடம் செய்வதற்குப் பதிலாக, தனது ஆசிரியரிடம் பேச்சு நடையிலேயே மீண்டும் மீண்டும் பாடம் நடத்தச் சொல்லிப் படித்து வந்தார். அப்படியும் மனதில் பதியாத விடயங்களுக்கு நேரடியாக செயல் வழிப் பயிற்சியில் ஈடுபட்டு, அனுபவ பாடமாகப் புரிந்துகொண்டார். ஆனால், அதற்கு பல மடங்கு நேரம் பிடித்தது. இருந்தாலும் தனது பாதையில் மாற்றுக் கோணத்தில் செயல்பட்டு அவர் வெற்றி பெற்றுவிட்டார்.

எனவே, வெற்றிப் பயணத்தில் தடங்கல்கள் ஏற்பட்டால், வெற்றிக்காக நீங்கள் பின்பற்றிய வழிகளைப் பட்டியலிடுங்கள்; வெற்றி தள்ளிப்போனதற்கான காரணத்தைப் பற்றி சிந்தியுங்கள்; மாற்று வழியை தேர்வு செய்யுங்கள். இறுதிவரை வெற்றி ஒன்றே குறியாக இருக்க வேண்டும். அதை நோக்கியே பயணிக்க வேண்டும். மாறாக, எதுவும் சரிவரவில்லை என்று எண்ணி, சோம்பேறித்தனமாக முடங்கிவிட்டால் முற்றாக சோம்பல் உங்களை ஆக்கிரமித்து எதிர்காலம் வீணாகிவிடும். எனவே, கிடைக்கும் அனுபவத்தை பாடமாகக்கொண்டு, பல்வேறு கோணங்களில் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனை வ

*வீட்டில் வளர்க்கப்படும் பூனை, காட்டுப்பூனை, பெரிய, சிறிய பூனை இனங்கள் அனைத்தும் ஒரே பூனைக் குடும் பத்தைச் சேர்ந்தவையே. இந்தப் பூனைகளுக்கே உரிய பொதுவான வரலாற்று இலட்சணங்கள் உள்ளன. பெரிய காடுகளான சைபீரியா, தென் ஆபிரிக்காவின் மலைப் பிரதேசக் காடுகள், பாலைவனப் பிரதேசங்கள் எங்கும் இவை வாழ்கின்றன. இவை உடல் அமைப்பில் ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன. சிலவற்றின் உடலில் தனியான ஒரே நிறம் காணப்படும் அதேவேளை, இன்னும் சிலவற்றின் உடம்பில் புள்ளிகள், வரிகள் என்பன பல்வேறு நிறங்களில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஊனுண்ணிகள் (மாமிச உண்ணி) ஆகும். சிங்கம், சிறுத்தை, புலி ஆகிய குடும்பத்தைச் சேர்ந்தவை இவை.*

*சீனாவில் 'மணிப்பூனை' என்ற புள்ளி வடிவப் பூனை, ஆபிரிக்காவில் கறுப்பு நிறக் கால் உள்ள பூனை, போர்னியோவில் 'பே கட்' பூனை இவை யாவும் ஒரே இனத்தவையாகும். இவ்வாறே வீடுகளில் வளர்க்கப்படும் பூனைகளையும் மறந்துவிட முடியாது. எனவே, பூனை களின் வாழ்க்கை வரலாறு, முதாதை இனம் பற்றிய தகவல்கள், வாழ்விடம், பற்றிய தகவல்கள் வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் பூனை மனிதனுடன் நெருக்க மாகியது எவ்வாறு? என்பன பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.*



## சீனாவின் மஞ்சள்நிற சிறுத்தைப் பூனை (Leopard Cat)

நாம் எமது வீடுகளில் வளர்க்கும் பூனையின் அளவை ஒத்ததாக சீனாவின் மஞ்சள் நிற சிறுத்தைப் பூனைகள் உள்ளன. இவற்றின் உடலில் மஞ்சள் கலந்த சிவப்பு நிறம் காணப்படுகின்றது. கரும்புள்ளிகளுடன் வெள்ளை நிறம் கலந்ததாகவும் உள்ளது. இந்தப் புள்ளிகள் சீன நாணயத்தின் அளவை ஒத்ததாக இருப்பதால் சீனர்கள் இதனை 'நாணயப் பூனை' (Coins Cat) என்றும் அழைக்கின்றனர். பழக்கப்பட்ட இந்தப் பூனைகள் எலிகளைப் பிடிப்பதில் திறமைய்ானவை என்பதால் வீடுகளில் வளர்க்கப்படுகின்றன.

இந்தவகை சிறுத்தைப் புலால் (மாமிச உண்ணிகள்) திபெத் நிலப்பரப்பில் இருந்து கொரியா வரையிலும் போர்னியோவில் இருந்து பிலிப்பைன்ஸ் வரையான அடர்ந்த காடுகளிலும் வாழ்கின்றன. இரவு நேரங்களில் வேட்டையாடும் இவை சிறிய குருவிகள் மற்றும் உயிரினங்களைப் பிடித்து இரையாக்கிக் கொள்கின்றன. வருடத்தில் இரண்டு அல்லது மூன்று குட்டிகளை ஈனுகின்றன. எப்போதும் நிழல் தரும் மரங்களில் வசிப்பதை விரும்பும் இந்த இனப் பூனைகள் இரவில் மரங்களிலேயே அதிகம் வசிக்கின்றன.



## மோதிர வாழ் பூனை (ரிங்டெய்ல் கட் - Ring Tailed Cat)

மாமிச உண்ணிக் குடும்பத்தைச் சேராத பூனைகளும் 'புலால் குடும்பம்' என்றே அழைக்கப்படுகின்றன. இதனை இந்தியாவில் 'டொடி கட்' என்றழைக்கின்றனர். மடகாஸ்கரின் 'போசோ' இனத்துக்கும் இவ்வகைப் பூனை இனத்திற்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த 'டொடி கட்' என்ற பூனை இனம் நன்றாக மரம் ஏறும் ஆற்றல் உள்ளவையாகும். அத்துடன், நிதானமான வேட்டைக்காரனுமாகும். 'பிலாலயா' இனப் பூனை போன்றே இவை ஓசை எழுப்புகின்றன. அசாதாரண நிலை ஏற்பட்டால் சாதாரண பூனை போன்று நடுங்குகின்றன.

மெக்சிகோவில் காணப்படும் தடிப்பான வால் உடைய பூனை வகைகள் கிழக்கு அமெரிக்கப் பகுதிகளில் வாழ்கின்றன. இதனை 'மர அணில்' என்றும் அழைப்பதுண்டு. ஆனால், மர அணில் பூனை வகையில் இருந்து வேறுபட்டதாகும். இலத்தீன் மொழியில் இந்தப் பூனை இனத்தை 'அரை நரி' என்று அழைக்கின்றனர். இந்தியாவில் இவ்வகைப் பூனையை 'கெகொமிஸ்டில்' என்றும் அழைக்கின்றனர். இவை சிறப்பு வகை உயிரினமாகும்.

## தென் அமெரிக்க 'மார்கே' பூனை (Margay Cat)

மார்கே பூனை உருவத்தில் சிறியதாக உள்ளன. நன்றாக வளர்ந்த பூனையொன்று 32 அங்குலம் அல்லது 39 அங்குல நீளம் வரை இருக்கும். உடம்பின் அளவுக்கு நீளமாக வால் இருக்கும். அதனால், இவற்றின் தோற்றம் அழகாக இருக்கின்றது. இவற்றை இலகுவில் செல்லப் பிராணியாகப் பழக்கிக்கொள்ள முடியும். பொன்னிற மேனியில் ஊதா நிறப்புள்ளிகள் காணப்படும். காதுகள் கூர்முனை போன்று உள்ளன. 'ஒசெலொட்' பூனைகளைப் போன்று இவையும் நதிக்கரை, குளம், குட்டைப் பகுதிகளில் அதிகம் வாழ்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்ச வாழ்க்கை







## அழகிய 'பள்ளாஸ்' இனப் பூனை (Pallay Cat)

அழகான மென்மையான உரோமம் உடைய நீண்ட வால் கொண்ட 'பள்ளாஸ்' இனப் பூனைகள் மிகவும் கவர்ச்சியானவை. இவ்வகைப் பூனைகளின் மூதாதைகள் ஆசியா முழுவதும் வாழ்ந்துள்ளன. 'மெனுல்' என்றழைக்கப்படும் இந்த வகைப் பூனைகள் இப்போது அருகிப் போய் திபெத் மற்றும் சைபீரியாப் பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றன. கடும் குளிர் மற்றும் புயல்களுக்கு தாக்குப் பிடிக்கும் வகையில் இதன் உடல் அமைப்பும் உரோமமும் அமைந்திருக்கின்றன. இவற்றின் தொண்டைப் பகுதியிலும் நெஞ்சுப் பகுதியிலும் நீளமாக வளர்ந்த மயிர்கள் உள்ளன. தலையில் இருந்து கீழ் நோக்கியதாகவே காதுகள் அமைந்துள்ளன. இவை இரவிலும் பகலிலும் வேட்டையாடும் ஆற்றல் கொண்டவை. இதன் கண்கள் மேல் நோக்கியதாக அமைந்துள்ளன. இதன் தலை உருண்டை வடிவம் கொண்டதால் கற்களுக்குள்ளும் முகத்தைப் புகுத்திப் பாதுகாப்பாகப் பதுங்கக்கூடியவையாகும். இதன் மூலம் எதிரிகளிடம் இருந்து தம்மை இலகுவாகப் பாதுகாத்துக்கொள்கின்றன. அத்துடன், இரையைப் பிடிப்பதற்கு அசைவுகள் இல்லாது ஓரிடத்தில் சுருண்டு படுத்திருக்கும். இரை அருகில் வந்ததும் பாய்ந்து கௌவிப் பிடித்துக்கொள்ளும். இவை ஏனைய பூனைகளைப் போன்று மியாவ் மியாவ் என்று கத்துவதில்லை. மாறாக நாய் குரைப்பது போன்றே ஒலி எழுப்புகின்றன.

## மலைப்பகுதி பொன் நிறப்பூனை (Golden Cat)

பொன்நிறப் பூனை என்றும் இதனை அழைப்பர். சீனாவில் மலைப்பாங்கான கற்பாறைகள் உள்ள பகுதிகளில் இவை அதிகமாக வாழ்கின்றன. இதனை 'கற்பூனை' என்றும் அழைக்கின்றனர். இவை கற்கள் மணல் பாங்கான இடங்களிலும் மறைந்து, பதுங்கி இருந்து வேட்டையாடும் வல்லமை கொண்டவையாகும். அதனால், இதன் உடல் நிறம் சூழலுக்கேற்றவாறு உள்ளது. மண்நிறமாகவும் கற்பாறைகளின் கறுப்பு, ஊதா கலந்த நிறமாகவும் இருப்பதால் இது பதுங்கி இருக்கும்போது ஏனைய பிராணிகளால் இதனை இலகுவில் அடையாளம் காணமுடியாது. இதன் முகத்திலும் கண்களுக்கு அருகிலும் கோடுகள் உள்ளன. நாம் இதனைப் பார்க்கையில் அது மிகவும் கவலையுடன் இருப்பது போன்று தோற்றமளிக்கும். திபெத்தில் வாழும் பொன்னிறப் பூனை இனம் 'மஞ்சள் சிறுத்தை' என்று அழைக்கப்படுகின்றது. மியன்மாரில் வாழும் இந்த வகைப் பூனைகளுக்கு அந்நாட்டு மக்கள் அஞ்சுகின்றனர். இதன் குட்டிகளின் உடம்பில் ஆரம்பத்தில் எதுவிதமான கோடுகளும் வரிகளும் இருப்பதில்லை. அவை பருமனாக வளரும்போதே தாயின் உருவத்தை ஒத்த நிறத்தையும் கவர்ச்சியையும் பெறுகின்றன.

## அவுஸ்திரேலியப் புலிப்பூனை (Australian Tiger Cat)

அவுஸ்திரேலியாவில் வாழும் மிருகங்கள், உயிரினங்கள் உலகின் ஏனைய பகுதி களில் உள்ள உயிரினங்களை விட வித்தியாசமானவை. ஆயினும், பரிணாம வாதத்திற்குட்பட்ட உயிரினப் பரம்பல் ஒன்றை அங்கு காணமுடிகின்றது. பூனைகளும் அவ்வாறே அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றன. அங்கு வாழும் உயிரினங்களில் சிலவற்றுக்கு உடம்பில் பை காணப்படுகின்றது. சிறு பராயத்தில் குட்டிகளை அதற்குள் வைத்துப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே இந்தப் பை இருக்கின்றது. உதாரணமாக கங்காருவின் உடம்பில் அதனை நாம் காணலாம்.

இங்கு வாழும் இவ்வகைப் புலி இனப்பூனைகள் பூனை என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் இவை பூனைக் குடும்பத்தைசேர்ந்தவை அல்ல. இதன் நீளம் 2 அடிகள் வரை இருக்கும். உடம்பில் சிவப்பு, ஊதா கலந்த உரோமம் அமைந்திருக்கின்றது. மஞ்சள் நிறப் புள்ளிகள் உள்ளன. நீளமான அதன் வாலிலும் இந்தப் புள்ளிகள் உள்ளன. பெண் பூனை ஒருமுறைக்கு 24 குட்டிகள் அளவில் ஈன்றெடுக்கின்றது. ஆனாலும், 6 இற்கும் குறைவானவை தான் வளர்ந்து பெரிதாகின்றன. ஏனையவை இறந்து



விடுகின்றன. அல்லது வேறு மிருகங்களுக்கு இரையாகி விடுகின்றன. அத்துடன், உணவுத் தட்டுப்பாடு நிலவின் அனேகமானவை இறந்து விடுகின்றன. பகலில் கற்பாறைகளில் புகுந்து அல்லது நிழல் உள்ள மறைவிடங்களில் உறக்கத்தில் பகலைக் கழிக்கின்றன. இரவில் மரங்களில் தாவிப் பாய்ந்து இரை தேடும் முயற்சியை ஆரம்பிக்கின்றன. இவை நிலத்திலும் நடந்து சென்று வேட்டையாடும் வல்லமையுடையவை.



## மணல் பூனை (Sand Cat)

மணல் பூனை எனப்படும் இவை அரபு நாடுகளில் வாழ்கின்றன. வட ஆபிரிக்காவிலும் தெற்கு ரஷ்யப் பகுதிகளிலும் இதன் இனப்பரம்பல் உள்ளது. உருவத்தில் சிறிய இந்த வகைப் பூனைகள் இரவு நேரங்களிலேயே வேட்டையாடுகின்றன. பகல் நேரங்களில் கடும் உஷ்ணம் காரணமாக சுருண்டு படுத்திருக்கும். இதன் உடம்பின் கால் மற்றும் வால்ப் பகுதிகளில் கறுப்பு நிற வரிகள் காணப்படுகின்றன. இதன் தலை சப்பையாகவும் காதுகள் அகலமாகவும் இருக்கும். பார்வைக்கு நரி போன்று இருக்கும். மணல் பூனைகளின் கேட்கும் சக்தி மிகவும் கூர்மையானது. இதன் பாதத்தின் அடிப்பாகத்தில் சதை காணப்படுகின்றது. இது பாலைவனப் பகுதிகளில் இலகுவாக நடந்து செல்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

(ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரின் ஒருபக்கத் தோற்றம்






கெமரூன் மலை



# கெமரூன்


**அரசு:** குடியரசு.
**சுதந்திரம்:** பிரான்ஸிடமிருந்து - 1 ஜனவரி, 1960; பிரித்தானியாவிடமிருந்து-1 ஒக்டோபர் 1961.
**தேசிய பெயர்:** ரிபப்லிக் டு கெமருன் (Republic of Cameroon).
**தேசிய விடுமுறை தினம்:** குடியரசு தினம் (தேசிய தினம்) மே 20.
**ஜனாதிபதி** (1982): போல் பியா.
**பிரதமர்** (2009): பிலமன் யாங்.


## புவியியல்

கினியா வளைகுடாவில் அமைந்துள்ள ஒரு மத்திய ஆபிரிக்க நாடு. இதன் **வடமேற்கு**-நைஜீரியா; **வடகிழக்கு**-சாட்; **கிழக்கு**-மத்திய ஆபிரிக்க குடியரசு, **தெற்கு**-கொங்கோ, கெபொன் மற்றும் ஈக்வடோரியல் கினியா என்பன எல்லைகளாக அமைந்துள்ளன. தாழ்ந்த மற்றும் சதுப்பு நிலத்தைக்கொண்ட கரையோரப் பிரதேசத்தை உடைய இந்நாட்டின் தரைத்தோற்றமானது மழைக்காடுகளைக்கொண்ட மேட்டுநிலத்தை நோக்கி உயர்ந்து செல்கின்றது. தூர தென்மேற்கு முழுவதும் மலைகளால் நிறைந்துள்ளன.பினு, நையோங் மற்றும் செனகா ஆகிய மூன்று பிரதான நதிகளும் வேறு பல சிறு நதிகளும் இங்கு பாய்கின்றன.




**மொத்தப் பரப்பு:** 183,567ச.மைல். (475,440 ச.கி.மீ);
**நிலப்பரப்பு:** 181,251 ச.மைல். (469,440 ச.கி.மீ)
**தலைநகரம்:** யோன்டே;
**பெரிய நகரம்:** டோலா.
**உயர் மலை:** கெமரூன் மலை; **தாழ் மையம்:** அட்லாண்டிக் கடல்.
**நிலப்பிரிவுகள்:** 10 மாகாணங்கள்.
**சனத்தொகை** (2009): 18,879,301.
**நாணய அலகு:** CFA பிரேங்.
**மொழிகள்:** பிரெஞ்ச், ஆங்கிலம் (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள்); 24 பிரதான ஆபிரிக்க மொழிகள்.
**இனங்கள்:** கெமரூன் உயர் குலத்தினர் 31%, ஈக்வடோரியல் பண்டு 19%, கிர்தி 11%, ஃபுலானி 10%, வடமேல் பண்டு 8%, கிழக்கு நைக்ரிடிக் 7%, ஏனைய ஆபிரிக்க இனங்கள் 13%, ஆபிரிக்க இனமல்லாதது 1%.
**சமயங்கள்:** உள்நாட்டு மதநம்பிக்கை 40%, கிறிஸ்தவம் 40%, இஸ்லாம் 20%.
**எழுத்தறிவு** (2006): 67.2%. **இணையத்தளக் குறியீடு:** .cm
**தொலைபேசிக் குறியீட்டு இல:** 237
**தேசிய சின்னங்கள்:** மலர், மரம், பறவை, மிருகம், விளையாட்டு என எதுவுமே பிரகடனப்படுத்தப்படவில்லை.




**தேசிய கீதம்**

O Cameroun berceau de nos ancetres,
Va debout et jaloux de ta liberte,
Comme un soleil ton drapeau fier doit etre,
Un symbole ardent de foi et d'unite….என ஆரம்பமாகின்றது.




## வரலாறு

பண்டு மொழி பேசும் மக்களே முதன்முதலாக கெமரூன் பிரதேசத்தில் குடியேறிய இனக் குழுவினராவர். அவர்களில் ஒரு பகுதியினர் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். 1884 ஆம் ஆண்டு முதன்முதலாக அந்நியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. பின்னர் ஜேர்மனி கெமரூனைக் கைப்பற்றி, தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. எனினும், 1919 ஆம் ஆண்டு முதலாம் உலக யுத்த முடிவின்போது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, பிரான்ஸ் கெமரூனின் 80% மான பிரதேசத்தைப் பெற்றது. பிரித்தானியா 20% பிரதேசத்தைப் பெற்று, தனது நைஜீரிய குடியேற்றத்துடன் இணைத்துக்கொண்டது.

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் 1946 ஆம் ஆண்டு சுயாட்சி வழங்கப்பட்டு, கெமரூன், மக்கள் யூனியன் கட்சியின் நிர்வாகத்தின்கீழ் வந்தது. அதனைத் தொடர்ந்து முறையே பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகியன சுதந்திரம் வழங்கின.

தேசிய இலச்சினை






## கலாசாரம்

கெமரூனிலுள்ள ஒவ்வொரு இனக்குழுவும் தமக்கென தனித்துவமான கலாசார விழுமியங்களைக்கொண்டு திகழ்கின்றது. தத்தமது இனக் கலாசாரத்திற்கு ஏற்ப பிறப்பு, பிறந்தநாள் கொண்டாட்டங்கள், மரணக்கிரியைகள், நாற்றுநடல், அறுவடையை மேற்கொள்ளல், மத வழிபாடு, சமய சம்பிரதாயங்கள் அனைத்தையும் மேற்கொள்கின்றன.

## காலநிலை

கெமரூனின் கரையோரப் பிரதேசங்கள் அதிக வெப்பமான காலநிலையையும் அதேபோல் அதிக மழை வீழ்ச்சியைக்கொண்டதாகவும் காணப்படுகின்றன. வடபிரதேசங்களில் வெப்பநிலை சராசரியாக 30°F ஆக இருக்கின்றது. நாளாந்த உயர் வெப்பநிலை 80°F ஆக இருப்பதோடு, வருட சராசரி வெப்பநிலை 70°F இலும் அதிகமாக இருக்கும். மேற்கு மலைத்தொடர் பிரதேசங்கள் அதிக குளிர்ச்சியாக இருக்கும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2002): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்**-110900; **செல்லிடத் தொலைபேசிகள்**-1.077 மில்லியன். **வானொலி நிலையங்கள்** (2002): AM 2, FM 9, SW 3. **தொலைக்காட்சி நிலையங்கள்** (2002): 1. **இணையத்தள வழங்குனர்கள்** (2004): 479. **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 60,000.

## போக்குவரத்து

**புகையிரப் பாதைகளின் மொத்த நீளம்** (2004):1,008 கிலோ மீற்றர். **பெருந்தெருக்கள்** மொத்தம்: 34,300 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 4,288 கிலோமீற்றர்; செப்பனிடப்படாதவை: 30012 கி.மீற்றர்). **நீர்வழிப் போக்குவரத்து:** பினு நதியில் மழைக்காலத்தில் மேற்கொள்ளப்படுகிறது. **துறையும் துறைமுகமும்:** டவ்லா, லிம்போ. **விமான நிலையங்கள்** (2004): 47.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்-13%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கோப்பி, கொக்கோ, பருத்தி, றப்பர், வாழைப் பழங்கள், எண்ணெய் விதைகள், கால்நடைகள், மரத்தளபாடங்கள். **தொழிலாளர் சக்தி:** 6.86 மில்லியன் (இதில் விவசாயம் 70%, கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை 13%, ஏனையவை 17%). **வேலையற்றோர்** (2001) : 30%. **கைத்தொழில்கள்:** பெற்றோலிய உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு, உணவுப் பொருட்கள், புடைவை, கப்பல் பழுதுபார்த்தல். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், பொக்ஸிட், இரும்புருக்கு, மரங்கள், நீர்மின்வலு. **ஏற்றுமதிகள்** (2005): மசகு எண்ணெய் மற்றும் பெற்றோலிய உற்பத்தி பொருட்கள், அலுமினியம், கோப்பி, பருத்தி. **இறக்குமதிகள்** (2005): இயந்திரங்கள், மின் உபகரணங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஸ்பெய்ன், இத்தாலி, ஐக்கிய ராச்சியம், பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, தென் கொரியா,நெதர்லாந்து நைஜீரியா, பெல்ஜியம், சீனா, ஜேர்மனி.


## பிரசித்தி பெற்ற இடங்கள் சில…

✱ முஸா மரபியல் பவனம் ✱ வாஸா தேசிய பூங்கா ✱ கம்போ மா அன் தேசிய பூங்கா ✱ கெமரூன் மலை ✱ Mvog-Betsi விலங்கினக் காட்சிசாலை ✱ **Bidzar, Diy-Gid-Biy, Dja Faunal Reserve** (தொல்பொருளியல் இடங்கள்) ✱ Rhumsiki ✱ Babungo, Baham, Bandjoun, Mankon (நூதனசாலைகள்)

Rhumsiki கிராமம்



வாஸா தேசிய பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்த பகவானின் சிறப்பைக் கூறும் வெசாக் தினம்

மே மாதம் 27 ஆம் திகதியன்று வெசாக் திருநாளை பௌத்த மக்கள் கொண்டாடுகின்றனர்.


புத்தபகவானின் வாழ்வில் இடம்பெற்ற முக்கிய மூன்று திருப்பங்களான பிறப்பு, பரிநிர்வாணம், முக்தி ஆகிய மூன்று நிகழ்வுகளை நினைவு கூரும் வகையிலேயே இந்தத் திருநாள் கொண்டாடப்படுகிறது. இந்த மூன்று நிகழ்வுகளும் இந்த வைகாசி விசாக தினத்திலேயே இடம்பெற்றதனால் இத்திருநாள் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

குழந்தைகள், சிறியோர், பெரியோர் என யாவரையும் மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு நிகழ்வாகக் கொண்டாடப்பட்டு வருவதுதான் 'வெசாக்' எனப்படும் இந்த வைகாசி விசாகத் திருநாள்.

இந்தியாவின் கபிலவஸ்து நகருக்கு அருகில் உள்ள 'லும்பினி' என்னுமிடத்தில் அரச குடும்பமொன்றில் பிறந்தார் கௌதம புத்தர். இவருடைய பிறப்பைப் பற்றி ஆரூடம் கூறிய சோதிடர்கள் இவர் நோய், இறப்பு, முதுமை, துறவறம் ஆகிய நான்கையும் காணக்கூடாது என்றும், அவ்வாறு காணநேரிட்டால் உலக வாழ்வை துறந்து துறவியாகிவிடுவார் என்றும் கூறியதையடுத்து அவற்றை அவர் பார்க்க முடியாத வகையில் பெற்றோர் அவரை பாதுகாத்து வளர்த்தனர். ஆனாலும், காலப்போக்கில் அவர் இந்த நான்கையும் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அதனையடுத்து அவர் சோதிடர்கள் கூறியது போல் உலக வாழ்வைத் துறந்து துறவுக் கோலம் பூண்டார்.

இத்துணை சிறப்புமிக்க புத்தபகவான் உலகுவாழ் மக்களுக்கு பல போதனைகளை செய்துள்ளார். அவரது போதனைகளில் மனிதத்துவம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பிற உயிர்களை இம்சிக்கக் கூடாது என்பதும் இதில் அடங்கியுள்ளது. எனவே, புத்தபகவானின் போதனைகளில் கவரப்பட்டவர்கள் அவரது போதனைகளின்படி நடக்க விருப்பம் கொண்டு, அந்த வழிவகையில் உருவான பௌத்த மதத்தைப் பின்பற்றி புத்தபகவானின் பிறப்பு, இறப்பு, பரிநிர்வாணம் ஆகிய நிலைகளை உணர்த்தும் வெசாக் தினத்தை உன்னதமிகு நாளாக அனுஷ்டிக்கின்றனர்.



**புத்தபகவான் உலகவாழ் மக்களுக்கு பல போதனைகளை செய்துள்ளார். அவரது போதனைகளில் மனிதத்துவம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பிற உயிர்களை இம்சிக்கக்கூடாது என்பதும் இதில் அடங்கியுள்ளது**

வெசாக் நாளில் எங்கிலும் வண்ணத் தோரணங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்தோரணங்களின் மூலம் பௌத்தம் தொடர்பான வரலாற்றுச் சம்பவங்கள் என்பன கதைகளாக கூறப்படுவதை காணலாம். அத்தோடு, வீதிகள் எங்கிலும் ஆங்காங்கே தண்ணீர் பந்தல்கள், அன்னதானப் பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டு இருப்பதையும் காணலாம்.

பௌத்த தர்மத்தின்படி புண்ணியத்தை தேடிக் கொள்ளும் வகையில் இந்த தானம் வழங்கும் நடைமுறையானது பாரம்பரியமாக நடைபெற்று வருகின்றது. ஆங்காங்கே 'வெசாக்' தோரணங்கள் போடப்பட்டும், வீடுகளிலும் வீதியோரங்களிலும் பௌத்த வழிபாட்டுத் தலங்களிலும் வண்ண வண்ண வெசாக் கூடுகள் போடப்பட்டும் ஒளியேற்றப்படுகின்றன.



புத்தபகவானின் இயற்பெயர் சித்தார்த்தர் என்பதாகும். இவருடைய பிறப்பைப் பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் ஏற்கனவே கூறப்பட்டிருப்பதால் இவருடைய பிறப்பு பகவானின் ஒரு அவதாரம் என்ற ரீதியில் இந்து, வைஷ்ணவ மக்களும் புத்தபகவானை வழிபட்டு வருதோடு, இவ்வைகாசி விசாகத் திருநாளையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

THE GREATEST




மேதைகள் அபூர்வமானவர்கள்.
அரிதாகவே பிறக்கும் அவர்கள் சமுதாயத்தின்
சிந்தனையை மாற்றுகின்றனர். அவர்கள் மறைந்த பின்னரும்
அவர்களது சொற்களும் செயல்களும் வாழ்கின்றன. அத்தகைய
மேதைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய சஞ்சிகை... The Greatest

The Greatest வாராந்த சஞ்சிகையாக Daily Mirror
பத்திரிகையுடன் இலவசமாக வழங்கப்படுகிறது

வளர்ந்தோர், சிறுவர் அனைவரினதும் அறிவுக்கு விருந்தாகும்
12 இதழ்களாக மே 5 ஆம் திகதி முதல்
வாராந்தம் வெளியாகும்

GREATEST வாசியுங்கள். DailyMirror வாங்குங்கள்.
அருகிலுள்ள Daily Mirror விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

Physicists | Poets | Philosophers | Chemists | Astronomers | Novelists
Olympians | Explorers | Singers | Leaders | Inventors | Mathematicians

இவர்கள் அனைவரும் தத்தமது துறையில் அபாரமான சாதனை படைத்தவர்கள்.

food city
DailyMirror

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II

சுட்டெண்: ................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. பின்வரும் பாடலை வாசித்து (i) இலிருந்து (vii) வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

கும்மியடி பெண்ணே கும்மியடி - நீ
குனிந்து வளைந்து கும்மியடி
குழந்தைப் பெண்ணே கும்மியடி - நீ
குலத்தைக் காத்திட கும்மியடி

தையும் பிறந்தது கும்மியடி - நீ
தரணி சிறக்கக் கும்மியடி
தை தை என்றே கும்மியடி - நீ
தைப் பொங்கலன்று கும்மியடி

சித்திரை வந்தது கும்மியடி - நீ
சிறப்புடன் வாழக் கும்மியடி
சின்னப் பெண்ணே கும்மியடி - நீ
சிட்டுப் போலக் கும்மியடி

ஆடி பிறந்தது கும்மியடி - நீ
ஆடி மகிழக் கும்மியடி
ஆடிப்பெருக்கில் கும்மியடி - நீ
ஆனந்தமாகக் கும்மியடி.

(i) 'தரணி' என்பதன் ஒத்த சொல்லை எழுதுக.

........................................................................

(ii) உயர்திணை பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக.

........................................................................

(iii) 'ஆனந்தம்' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

........................................................................

(iv) காலப்பெயரைக் குறிக்கும் சொல் ஒன்றை எழுதுக.

........................................................................

(v) பாடலில் வந்த முன்னிலை ஒருமைச் சொல் ஒன்றை எழுதுக.

........................................................................

(vi) தைப்பொங்கல் யாருடைய பண்டிகை?

........................................................................

(vii) 'சின்னப் பெண்ணே கும்மியடி' என்னும் வாக்கியத்தில் உள்ள அடைமொழிச் சொல்லை எழுதுக.

........................................................................

02. வெற்றிடத்துக்குப் பொருத்தமான மிகச்சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) ................................ பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான். (உழவு, உலவு, உளவு)

(ii) காகம் அங்கும் இங்கும் ........................ இரை தேடியது. (பரந்து, பறந்து, பறத்து)

03. வாக்கியங்களை நன்கு வாசித்து உரிய இடத்தில் நிறுத்தல் குறிகளை இடுக.

(i) சங்கர் தனது தாயைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள் தானே என்று கேட்டான்

(ii) ஐயோ என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா

04. சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளை எழுதுக.

(i) இ.ஒ.கூ. ........................................................................

(ii) இ.மி.ச. ........................................................................

05. மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

(i) காது குத்துதல் - ........................................................................

(ii) இரண்டுங் கெட்டான் - ........................................................................

06. பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.

(i) காகந் திட்டி மாடு சாகாது - ........................................................................

(ii) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - ........................................................................

07. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) மஞ்சள் - ........................................................................

(ii) தண்ணீர் - ........................................................................

(iii) அண்ணா- ........................................................................

08. கருத்தைத் தமிழில் தருக.

(i) Please sit down -........................................................................

(ii) I am reading a book -........................................................................

09. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) அ(ப்)பி கிரிபத் கமு - ........................................................................

(ii) ஓயாகே நம மொ(க்)க(dh)த? - ........................................................................




★ *10 தொடக்கம் 37 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.*

10. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

(1) வேம்பு (2) கொன்றைப் பூ
(3) பிறைப் பூ (4) வாகைப் பூ

11. தண்டின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் எது?

(1) ஈரப்பலா (2) பொன்னாங்கண்ணி
(3) சதைகரைச்சான் (4) சோளம்

12. மாலையில் மலரும் பூ எது?

(1) கடுபுல் (2) செம்பருத்தி
(3) நந்தியாவட்டை (4) நான்கு மணிப் பூ

13. தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணி எது?

(1) நத்தை (2) மயிர்க்கொட்டி
(3) வண்ணத்துப் பூச்சி (4) தேவாங்கு

14. ஔடதபானம் தயாரிக்கப் பயன்படும் பூ எது?

(1) பொன்னாவரை (2) அலரி
(3) நித்திய கல்யாணி (4) அகத்தி

15. வீட்டில் இயற்கையாகக் காணப்படும் பிராணி எது?

(1) கிளி (2) கோழி (3) கரப்பான் (4) பூனை

16. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?

(1) பசுபிக் சமுத்திரம் (2) இந்து சமுத்திரம்
(3) ஆட்டிக் சமுத்திரம் (4) அத்திலாந்திக் சமுத்திரம்

17. தேசியகொடியில் தமிழ் மக்களைக் குறித்து நிற்கும் நிறம் எது?

(1) பச்சை (2) மஞ்சள் (3) செம்மஞ்சள் (4) செந்நிறம்

18. ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் மேற்கு வானில் தோன்றும் உடுத்தொகுதி யாது?

(1) தென்சிலுவை (2) கார்த்திகை
(3) பெருங்கரடி (4) ஓராயன்

19. சூரியனுக்கு மிகவும் அண்மையிலுள்ள கோள் எது?

(1) வியாழன் (2) செவ்வாய் (3) புதன் (4) புவி

20. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவிற்கு எத்திசையில்?

(1) வடக்கே (2) மேற்கே (3) கிழக்கே (4) தெற்கே

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

### வினாத்தாள் I இன் விடைகள்

(மே 12, 19 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *01.* | (ii) | *02.* | (ii) | *03.* | (iii) | *04.* | (iii) |
| *05.* | (iii) | *06.* | (ii) | *07.* | (i) | *08.* | (ii) |
| *09.* | (iv) | *10.* | (iii) | *11.* | (i) | *12.* | (i) |
| *13.* | 56 | *14.* | (i) | *15.* | (ii) | *16.* | (ii) |
| *17.* | (iii) | *18.* | (iii) | *19.* | (iii) | *20.* | (ii) |
| *21.* | (ii) | *22.* | (i) | *23.* | (iii) | *24.* | (i) |
| *25.* | (ii) | *26.* | (iii) | *27.* | (iii) | *28.* | (ii) |
| *29.* | (ii) | *30.* | (ii) | *31.* | (i) | *32.* | (iii) |
| *33.* | (iii) | *34.* | 1.1cm | *35.* | 1.1cm | *36.* | 25 |
| *37.* | *16* | *38.* | *அது, அவை* | *39.* | *கு* | *40.* | *அன்பு, அறம்* |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இடி, மின்னல் விமானங்களைத் தாக்குமா?






விபத்துக்குள்ளான எயார் ஃபிரான்ஸ் 447 விமானத்தின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டபோது...

'சீரற்ற காலநிலை காரணமாக இடி-மின்னல் தாக்குதல்கள் அதிகம். எனவே, பொதுமக்கள் கவனமாகச் செயற்படுங்கள்' என்று அண்மைக்காலமாக ஊடகங்கள் வாயிலாக பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றமை நிச்சயம் உங்கள் கவனத்தை ஈர்த்திருக்கும். நிலவும் சீரற்ற காலநிலையினால் உலகின் பல பாகங்களிலும் அனர்த்தங்கள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. வெள்ளப்பெருக்கு, மண்சரிவு என ஆரம்பிக்கும் அனர்த்தப் பட்டியலில் தற்போது இடி-மின்னல் தாக்குதலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இதனால், உயிரிழப்புக்கள் மட்டுமன்றி சொத்திழப்புக்களும் பாரியளவில் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில், கடந்த வருடம் உலகையே கதிகலங்க வைத்த 'எயார் ஃபிரான்ஸ் 447' விமான விபத்தை இவ்வருடம் நினைவு கூருவதற்கு இது உரிய தருணம் என நினைக்கின்றோம். கடந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதி பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனைரோவில் இருந்து ஃபிரான்ஸ் தலைநகர் பெரிஸுக்குப் புறப்பட்டது எயார் ஃபிரான்ஸ் 447 விமானம். 216 பயணிகளும் 12 விமானக் குழுவினரும் உள்ளடங்கலாக மொத்தம் 228 பேர் அதில் பயணம் செய்தனர்.

பிரேசில்-ஃபிரான்ஸ் நாட்டுக்கு இடையில் அட்லாண்டிக் கடலுக்கு மேலாக குறித்த விமானம் பறந்து கொண்டிருந்தது. அதுவரை கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பில் இருந்த விமானம், திடீரெனத் தொடர்புகளை இழந்தது. 'ரெடார்' கண்காணிப்பில் இருந்தும் மறைந்தது. விமானம் கடத்தப்பட்டதா?, விபத்துக்குள்ளானதா? இப்படிப் பல கேள்விகள் எழுந்தன. இறுதியில் அட்லாண்டிக் கடல் பகுதியில் நிலவிய மோசமான வானிலையால் மின்னல் தாக்கி விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்று அனுமானிக்கப்பட்டது. தவிர, இயந்திரக் கோளாறுகளினால் விமானம் விபத்தை சந்தித்தது என்றொரு கருத்தும் நிலவுகின்றது.

எவ்வாறாயினும், மின்னல் தாக்கி விமானம் எப்படி விபத்துக்குள்ளாகும்? இடி, மின்னல்கள் பாதிக்காத வகையிலேயே விமானங்கள் வடிவமைக்கப்படுகின்றன. அப்படியிருந்தும் இவ்வாறான விமான விபத்துக்கள் எப்படி நிகழ்கின்றன?

## இடி, மின்னலினூடாக விமானம் பயணித்தால்....

மேகங்கள் ஒன்றோடு ஒன்று உரசும் போது இடி, மின்னல் உருவாகும். இவ்வாறு ஏற்படும் மின்னலில் அதிக சக்தி வாய்ந்த மின்சாரம் உருவாகும். மின்னல் உருவான உடனேயே அது பூமியை நோக்கி வேகமாகப் பயணிக்கத் தொடங்கிவிடும். மின்னல் பயணிக்கும் போது, அதன் குறுக்கே விமானம் பறந்தால், மின்னலில் இருந்து உருவான மின்சாரம் விமானத்தில் இறங்கிவிடும். அப்படி மின்சாரம் இறங்கினாலும் விமானத்தின் இறக்கையில் பொருத்தப்பட்டுள்ள இடிதாங்கி மூலம் மின்சாரத்தை பூமிக்கு கடத்திவிட முடியும். அதையும் தாண்டி சில சமயங்களில் மின்னலில் இருந்து தப்பிக்க முடியாமலும் போகலாம். இடிதாங்கி செயல் இழந்தாலும் விபத்தைத் தவிர்க்க முடியாது.

அதுமட்டுமல்ல.... விமானத்தின் மேற்பகுதி அலுமினியத்தாலேயே மூடப்பட்டிருக்கும். அலுமினியம் நல்ல மின்கடத்தி. விமானத்தின் ஏதாவது ஒரு முனையில் சிறு அளவு மின்சாரம் தாக்கினாலும் மேற்பகுதி அலுமினியமாக இருப்பதால் சுலபமாக விமானம் முழுவதும் மின்சாரம் பரவிவிடும். அப்போது விமான சாதனங்களின் மின்உற்பத்தி, மின்னியல் சர்கிட்டுகளில் 'ஷோர்ட் சர்கிட்' ஏற்பட்டு கருவிகள் செயலிழந்து, விமானம் விபத்தைச் சந்திக்கும். அத்துடன், விமானத்தின் எரிபொருள் தாங்கியை மின்சாரம் தாக்கினாலும் தாங்கி வெடித்துச் சிதறிவிடும் என்கின்றனர் பொறியியலாளர்கள்.

## முதல் விபத்தும் அதன் பின்னரான பாதுகாப்பும்

இடி, மின்னல் மூலம் விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க விமானத்தில் பயன்படுத்தப்படும் அலுமினியம், மின் கடத்தாதபடி வடிவமைக்கப்படுகிறது. இதற்கான உறுதிச் சான்றிதழை பொறியியலாளர்கள் வழங்க வேண்டும் என்று அமெரிக்காவில் 1967 இற்குப் பின்னர் விதிமுறை வகுக்கப்பட்டது. 1960 களில் அமெரிக்காவில் தனியார் மற்றும் கார்கோ விமானங்கள் ஆண்டுக்கு ஒரு முறையாவது இடி, மின்னல் தாக்கத்தினால் விபத்துக்குள்ளாகிக் கொண்டிருந்தன. குறிப்பாக, மேகக்கூட்டத்திற்குள் விமானம் பயணிக்கும்போது மின்னல் தாக்கி விமானங்கள் செயலிழந்த ஒரு காலகட்டம் அது.

இறுதியாக 1967 இல் ஒரு விமானம் மின்னல் தாக்கி மிக மோசமான விபத்தை சந்தித்தது. இதன்போது விமானத்தின் எரிபொருள் தாங்கி வெடித்துச் சிதறியது. இந்த விபத்துக்குப் பின்னரே உலக நாடுகள் இடி, மின்னலில் இருந்து விமானங்களை பாதுகாப்பது குறித்து யோசிக்கலாயின. பின்னர், அதற்கான பாதுகாப்பு நுட்பங்கள் விமானங்களில் மேம்படுத்தப்பட்டன. விமான வடிவமைப்பு நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதேவேளை, அமெரிக்காவில் உள்ள தேசிய போக்குவரத்து பாதுகாப்பு சபை (National Transportation Safety Board) 1963 முதல் 1989 ஆம் ஆண்டு வரை இடி, மின்னல் மூலம் 40 விமானங்கள் விபத்துக்குள்ளானதாக தகவல்களைப் பதிவு செய்துள்ளது. இவற்றில் ஒன்று மட்டுமே பயணிகள் விமானம். 10 கார்கோ விமானங்கள். எஞ்சியவை தனியார் விமானங்கள்.

> **'1960 களில் அமெரிக்காவில் தனியார் மற்றும் கார்கோ விமானங்கள் ஆண்டுக்கு ஒருமுறையாவது இடி, மின்னல் தாக்கத்தினால் விபத்துக்குள்ளாகிக் கொண்டிருந்தன. குறிப்பாக, மேகக்கூட்டத்திற்குள் விமானம் பயணிக்கும்போது மின்னல் தாக்கி விமானங்கள் செயலிழந்த ஒரு காலகட்டம் அது'**

## விமானப் பாதுகாப்பு விதிமுறைகள்

விமானப் பாதுகாப்பு சம்பந்தமாக அமெரிக்காவில் உள்ள Federal Aviation Administration (FAA) பல விதிமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளது. அதன்படி, இந்த தொழில்நுட்பயுகத்தில் அலுமினியத்தைவிட குறைந்த அளவு மின்சாரத்தை கடத்தும் பல அடுக்குகளைக்கொண்ட கலப்பு உலோகங்களே விமானங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவை மின்னலில் இருந்து பாதுகாக்கும் வகையில் உள்ளது. இப்படி வடிவமைக்கப்படும் விமானங்களும் நன்கு சோதனை செய்யப்பட்ட பின்னரே சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படுகின்றன. தனியார் நிறுவன விமானங்கள், சிறிய ரக விமானங்கள், கார்கோ விமானங்களில் இடி மின்னலில் இருந்து பாதுகாக்கும் வகையில் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளையும் FAA வகுத்துள்ளது.

விமானங்கள் விபத்துக்குள்ளாவதில் எரிபொருள் தாங்கியே முக்கிய பங்கு வகிக்கின்றது. இதில் ஏற்படும் நுண்ணிய தீப்பொறிகூட எரிபொருள் தாங்கியை வெடிக்கச் செய்துவிடும். எனவே, இடி-மின்னல்களில் இருந்து எரிபொருள் தாங்கியைப் பாதுகாக்க அதிகபட்ச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மின்சாரத்தைத் தாங்கும் அளவுக்கு மிகவும் தடிமனான உலோகங்களைக்கொண்டு எரிபொருள் தாங்கி வடிவமைக்கப்படுகிறது.

எனினும், என்னதான் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டாலும் இயற்கையை யாராலும் வெல்லமுடியாது என்பதே தெளிவான உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களினதும் பல்வகைமையைக் குறிப்பதற்கே 'உயிரியல் பல்வகைமை' என்ற சொல் பயன்படுகின்றது. நுண்ணிய விலங்குகள் முதல் பாரிய விலங்குகள் வரையான உயிரினங்களின் பல்வேறு வகைகள் இதற்குள் அடங்குகின்றன.

2010 International Year of Biodiversity

சர்வதேச உயிரியல் பல்வகைமை வருடத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை

## உயிரியல் பல்வகைமையின் பிரதான அம்சங்கள்

உயிரியல் பல்வகைமையின் பிரதான அம்சங்களாக மரபணு பல்வகைமை, விசேட பல்வகைமை, சூழல் கட்டமைப்பு பல்வகைமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## மரபணு பல்வகைமை

மரபணுத் தாக்கத்தினாலான மாற்றங்களினால் குறிப்பிட்ட ஓர் உயிரினத்தினுள் ஏற்படுகின்ற பல்வகைமையே 'மரபணு பல்வகைமை' எனப்படுகின்றது.

## விசேட பல்வகைமை

பலதரப்பட்ட உயிரினங்களில் காணக்கூடிய பல்வகைமை 'விசேட பல்வகைமை' எனப்படுகின்றது. தற்போதைய கணக்கெடுப்பின்படி 1.8 மில்லியன் உயிர் பல்வகைமைகள் உலகில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

## சூழல் கட்டமைப்பு பல்வகைமை

சூழல் கட்டமைப்பு அடிப்படையிலான பல்வகைமையே இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

## உயிரியல் பல்வகைமையின் பயன்பாடுகள்

* உயிரினங்களுக்கான உணவு உயிரியல் பல்வகைமையினாலேயே பெறப்படுகின்றது.
* மருந்துகள் தயாரிப்புக்கு உயிரியல் பல்வகைமை பயன்படுகின்றது.
* சூழல் சமநிலை பேணப்படுகின்றது.
* இயற்கை வளங்களின் சிறந்த செயற்பாட்டிற்கு உயிரியல் பல்வகைமை அவசியமாகின்றது.
* சூழல், அழகு மற்றும் அழகியல் தேவைப்பாடுகளுக்காகவும் இது அவசியமாகின்றது.

## இலங்கையில் உயிரியல் பல்வகைமையின் அவசியத்துவம்

* இலங்கை சிறந்த உயிரியல் பல்வகைமையுடைய நாடாகும்.
* இங்கு அறியக்கிடைக்கின்ற தனித்துவமான உயிரினங்களின் எண்ணிக்கை அதிகமாகும்.
* உயிரியல் பல்வகைமை தொடர்பிலான பாரம்பரிய அறிவுடைய ஒரு நாடாக எமது நாடு விளங்குகின்றது.
* சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சூழல் கட்டமைப்புகள் எமது நாட்டில் நிலவுகின்றன.

## உயிரியல் பல்வகைமை உடன்படிக்கை

1992 இல் பிரேசிலின் ரியோ டி ஜெனைரோவில் நடைபெற்ற உலக புவித் தின மாநாட்டில் வெளியிடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது உயிரியல் பல்வகைமை வருடம்’






சர்வதேச உடன்படிக்கையாக ‘சர்வதேச உயிரியல் பல்வகைமை உடன் படிக்கை’ திகழ்கின்றது. உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு, உயிரியல் பல்வகைமையை நிரந்தரமாகப் பயன்படுத்தல் மற்றும் இதனால் ஏற்படும் நலன்களை சமமாகவும் நீதியாகவும் பகிர்ந்துகொள்ளல் என்பன இந்த உடன்படிக்கையின் நோக்கங்களாகும்.

## இலங்கையும் அங்கத்துவம் பெறல்

மேற்படி ஆண்டில் இடம்பெற்ற புவித் தின மாநாட்டிலேயே இலங்கையும் புதியஅங்கத்துவ நாடாக கையொப்பமிட்டதுடன், 1994 இல் அது இலங்கையில் நிறைவேற்றப்பட்டது.

## சர்வதேச உயிரியல் பல்வகைமை வருடம்

ஐக்கிய நாடுகள் சபையினால் 2010 ஆம் ஆண்டு சர்வதேச உயிரியல் பல்வகைமை ஆண்டாகப் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது.

## 2010 சர்வதேச உயிரியல் பல்வகைமை ஆண்டின் நோக்கங்கள்

* உயிரியல் பல்வகைமையின் முக்கியத்துவம் மற்றும் உயிரியல் பல்வகைமை பாதுகாப்புத் தொடர் பான விழிப்புணர்வை அதிகரித்தல்.
* தீர்வுக்கான புதிய முறைமைகளை முன்னெடுத்தல்.
* உயிரியல் பல்வகைமை அழியும் வேகத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

## 2010 சர்வதேச உயிரியல் பல்வகைமை வருடத்தின் பிரதான செய்தி

* மனித இனத்தின் நன்மைக்காக உயிரியல் பல்வகைமையை பாதுகாத்தல் அவசியமாகும்.
* உயிரியல் பல்வகைமை அழிவடைந்துவரும் வேகம் தற்போதளவில் மோசமாக இருக்கின்றது. சில உயிரினங்கள் இயற்கையாக அழியும் வேகத்தினைவிட 100 மடங்கு வேகத்தில் அழிவடைந்து வருகின்றன.
* இந்த உயிரியல் பல்வகைமை அழிவடைந்துவரும் ஆபத்தினைத் தடுக்கவென நாம் இணைந்து செயற்பட வேண்டும்.

## 2010ஆம் வருடத்தின் உயிரியல் பல்வகைமைக்கான இலக்குகள்

* தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டத்தில் தற்போது நிலவும் உயிரியல் பல்வகைமை அழிவடைந்து வரும் வேகத்தினை குறிப்பிட்ட அளவுக்குக் குறைத்தல்.
* இதனூடாக வறுமை நிலையைக் குறைத்தல்.
* உலகின் அனைத்து உயிரினங்களும் நன்மையடையச் செய்தல்.

## ஒவ்வொருவருக்குமான பொறுப்புகள்

* உங்கள் நகரத்தில், பிராந்தியத்தில் அல்லது நாட்டின் உயிரியல் பல்வகைமை பற்றியும் உங்களது நுகர்வு முறைகள் உயிரியல் பல்வகைமையை எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றியும் கற்றுக்கொள்ளுங்கள்.
* பொறுப்பான நுகர்வு முறைகளுக்காகவும் உயிரியல் பல்வகைமையின் பாதுகாப்புக் காகவும் செயற்படுங்கள்.
* உயிரியல் பல்வகைமை பற்றிய உங்கள் பார்வை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சனின் அறிவுரைகள்



ஓர் ஊரில் கந்தன் என்னும் பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் மிகுந்த கஞ்சன். பணம் கொடுக்காமல் வேலை வாங்குவதில் கில்லாடி. ஒருநாள் அவர் தனது மாமனார் தந்த உப்பு மூட்டையை பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு பஸ் நிலையத்தில் வந்து இறங்கினார்.

உப்பு மூட்டையை வீடுவரை தூக்கிவர ஆளைத் தேடினார். குமார் என்ற இளைஞன் வேலை கிடைக்குமா என்று பஸ் நிலையத்தைச் சுற்றி வரும்போது அவன் கந்தனின் கண்ணில்பட்டான். கந்தன் அவனைப் பார்த்து, "தம்பி உப்பு மூட்டையை என் வீடுவரை தூக்கிக் கொண்டு வருகிறாயா?" என்று கேட்டார். "எவ்வளவு கூலி தருவீர்கள்?" என்றான் குமார். "தம்பி உனக்கு எவ்வளவு கூலி வேண்டும்?" என்று கேட்டார். அதற்குக் குமார் "சிறப்பான கூலியைத் தாருங்கள்" என்றான். "தம்பி! பணத்தைவிட வாழ்க்கைக்குப் பயன்படும் சிறந்த மூன்று முத்தான அறிவுரைகளைக் கூறுகிறேன்" என்றபடி குமாருடன் அவர் தனது வீட்டை அடைந்தார். உப்பு மூட்டையை வீட்டு வாசலில் வைக்குமாறு கூறினார். பின் அந்த மூன்று முத்தான அறிவுரைகளைக் கூறத் தொடங்கினார்.

1. செத்தவன் பிழைத்தான் என்றால் நம்பாதே.
2. சூரிய கிரகணத்தில் குடியேறி வாழலாம் என்றால் நம்பாதே.
3. கஞ்சனின் அறிவுரை கேட்டு நீ உருப்படுவாய் என்றால் நம்பாதே.

என்று கூறி முடித்தார். கஞ்சனாகிய இப்பணக்காரர் தன்னை ஏமாற்றிவிட்டார் என்பது குமாருக்குப் புரிந்தது. வாசலில் இருந்த உப்பு மூட்டையைத் தூக்கிக்கொண்டு சென்று அருகில் உள்ள கிணற்றுக்குள் போட்டான்.

அதைக் கண்ட கஞ்சன் உடனே பதறிப் போய் "என்ன காரியம் செய்தாய்?" என்றார். அதற்கு குமார் "கிணற்றில் போட்ட உப்பு மூட்டை காரையாது என்று யாராவது சொன்னால் நம்பாதே" என்று நான்காவது அறிவுரையைக் கூறிவிட்டு நடையைக் கட்டினான்.

இ.துஷாந்தி,
யா/சாவகச்சேரி இ.கல்.,

# விடுகதைகள்

01. பெரிய என்பது பொருள்; கனியால் பெற்றது புகழ் அது என்ன?
02. வெல்லக்கட்டிப் பிள்ளைகள்; முள்ளால் இருக்குத் தொல்லைகள். அது என்ன?
03. அடி முதல் நுனி வரை பயனே; முடி சாய்த்து கனி கொடுக்கும் நலமே. அது என்ன?
04. காலடியில் நீர் பாய்ச்ச; தலைமுடியில் காய் கொடுக்கும். அது என்ன?
05. பிள்ளையாரின் இருப்பு; மண்ணுக்குச் சிறப்பு. அது என்ன?
06. வேண்டிய ஆத்தாளின் மனையும் கசப்பே; பாண்டிய வேந்தனின் மாலையும் சிறப்பே. அது என்ன?
07. விழுதுவிட்டு இனம் பெருக்கும்; நிழல் தந்து நலம் கொடுக்கும். அது என்ன?
08. வெற்றிலையின் ஜோடி; வாய் சிவக்கும் கூடி. அது என்ன?
09. வாய் கூசும் பழம்தான்; வெப்பத்திலும் வளம்தான். அது என்ன?
10. காட்டிக்கொடுப்பவன் பேர்தான்; கடிதாய் இருக்கும் வேர்தான். அது என்ன?
11. வெற்றி எனும் பெயருண்டு; இதனைச் சூட ஜெயமுண்டு. அது என்ன?

## விடைகள்

01. மாமரம்
02. பலாப்பழம்
03. வாழைமரம்
04. தென்னைமரம்
05. அரசமரம்
06. வேப்பமரம்
07. ஆலமரம்
08. பாக்கு
09. புளியமரம்
10. கருங்காலி மரம்
11. வாகை மரம்



# வெற்றியின் ரகசியம்

★ காலத்தை வீணாக்காதே; அது உன்னை வீணடித்து விடும்.
★ மனதைத் திடமாக வைத்திரு; அது உன்னை வளப்படுத்தும்.
★ வெற்றி, தோல்வியை சமமாக எடுத்துக்கொள்; அது உனது வாழ்வை வளப்படுத்த உதவி செய்யும்.
★ பொறுமையைக் கடைப்பிடி; நாளை உன் வாழ்வில் வெற்றி கிட்டும்.
★ முயற்சியுடன் செயல் புரி; அது உனக்கு வெற்றியை உண்டாக்கும்.
★ மற்றவரைக் கண்டு பொறாமை கொள்ளாதே; அது உன் கண்ணியத்தைத் தாழ்த்தி விடும்.
★ பிறருக்கு உதவி செய்; அது நாளை உனக்கு உதவி செய்யப் பலரை உருவாக்கும்.

தொகுப்பு: கே.ஆர்.ரிஸ்லா,
தரம் - 9A, கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.



# மகாகவி சுப்ரமணிய பாரதியார்

மகாகவி சுப்ரமணிய பாரதியார் 1882 இல் இந்தியாவில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். இவரின் தாயார் லட்சுமி அம்மாள். இவரின் தந்தையார் சின்னச்சாமி ஐயர். பாரதியாருக்கு 5 வயதானபோது தாய் லட்சுமி அம்மாள் இறந்துவிட்டார்.

இவர் சிறுவர்களைக் கவரக்கூடிய பாடல்களையும் பாப்பாப் பாடல்களையும் அதிகமாக இயற்றியுள்ளார். பாரதியார் கவிதைத் துறையிலும் பாடல்களை இயற்றுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார்.இதனால், அவருக்கு 'மகாகவி' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

பாரதியார் தனது 14 ஆவது வயதில் திருமணம் செய்தார். சுப்ரமணிய பாரதியார் தினமும் கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது வழக்கம். ஒருநாள் கோவிலுக்குச் சென்றிருந்த போது ஒரு மதம் பிடித்த யானை அவரை மிதித்துக் கொன்றுவிட்டது.

இத்துயரமான சம்பவம் 1921 ஆம் ஆண்டு அவரது 39 ஆவது வயதில் நிகழ்ந்தது. இவர் மறைந்தாலும் அவரின் கவிதைகளும் பாடல்களும் என்றும் அழியாமல் எமக்குப் பயன் தந்து கொண்டுதான் இருக்கின்றன.

எம்.பீ.எஃப்.ஹஸ்னா,
தேவஹுவ மு.ம.வித்.,
புலனவெவ.



# கோவில் யானை

கோவில் யானை வருகுது
கொண்டாட்டத்துடன் வருகுது
மேள தாளம் முழங்கிடவே
வீதியில் ஊர்வலம் வருகுது.

தூணைப் போன்ற கால்களால்
ஆடி ஆடி வருகுது
ஆனை நடக்கும் அழகினை
அனைவரும் வந்து பாருங்கள்!

காதுகள் ரெண்டும் முறமாக
காணக் காண அதிசயமே!
சாதுவாகத் தேர் போல
சாமியைச் சுமந்தே வருகுது!

கோவில் யானை வருகுது
கோபுரமாக ஜொலிக்குது
கோபு வாடா சீக்கிரமே
தொட்டுப் பார்த்து வணங்கிடலாம்!

# தாய்மையின் மகிமை



அம்மா என்பது தமிழ் வார்த்தை. அதுவே குழந்தையின் முதல் வார்த்தை. அம்மா என்றதும் ஓர் அன்புருவமே நம் மனக் கண்முன்னே தோன்றும். கடவுளை நேரில் காணமுடியாது என்ற குறையைத் தீர்க்கும் வகையிலேயே ஒவ்வொருவருக்கும் அன்னை என்னும் கடவுள் கிடைத்திருக்கின்றார். ஒரு நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ, தலைவரோ, கவிஞனோ, கலைஞனோ, அறிஞனோ, நாட்டின் முன்னேற்றத்திற்காக எதிர்காலச் சந்ததியினரை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்லும் ஆசிரியரோ, பண்ணோடு இசைபாடும் பாடகனோ, மேடைப்பேச்சாளரோ அத்தனை பேரும் பிறந்தவுடன் முதன்முதலாகக் கூறிய வார்த்தை எது? அம்மா எனும் அந்த அமுத வார்த்தைதான். குழந்தையின் குரல் மட்டுமல்ல; கன்றின் குரலும் கன்னித் தமிழும்கூட சொல்லும் வார்த்தை அம்மாதான்.

கடவுளின் பிரதிநிதியாக எம் கண்முன்னே தோன்றும் தெய்வத்திற்குரிய சகல அம்சங்களும் பொருந்தப் பெற்று மனிதவுருவில் நடமாடும் தெய்வமே அன்னை.

எவ்வளவு துன்பம் வந்தாலும் சுமைதாங்கிபோல் சுமந்து எதையும் தாங்கிக்கொண்டு தன் செல்வத்தின் மனதை மகிழ்வித்து சிரிக்க வைத்து மகிழும் அந்தத் தாயின் உள்ளம் தன்னையே புகையாக்கிப் பிறருக்கு மணத்தைக் கொடுக்கும் ஊதுவத்தியைப் போன்றது. தாயின் தியாக உணர்விற்கு ஈடாக உலகில் எதுவுமே இருக்கமுடியாது.

எம்.எஃப்.நாதிரா, தரம் - 11,
ப/பாதினாவெல மு.வித்.,
பொரகஸ்.

# நகைச்சுவை

"அம்மா எங்கள் வகுப்பில் ஒரு சிறுவன் கீழே விழுந்துவிட்டான். எல்லோரும் சிரிச்சாங்க. நான் மட்டும் அழுதேன்"
"உனக்கு ரொம்பத்தான் இரக்க குணம்"
"விழுந்ததே நான்தான் அம்மா"

* * *

மகன்: அப்பா உங்களுக்கு கடிதம் வந்திருக்கு
அப்பா: எங்கே இருந்து வந்திருக்கு?
மகன்: தபால்காரன் கையில் இருந்துதான்.

எம்.இஸட்.எம்.சாஜித்,
தரம் – 8A, அல்-அமீன் மத்.கல்.,
எலபடகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணியர் நூற்றாண்டு விழா நட்பு வட்டம்

இலங்கை சாரணியர் சங்கம் Sri Lanka Girl Guide Association (SLGGA) நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் ஓர் அம்சமாக அண்மையில் நட்பு வட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நட்பு வட்ட நிகழ்வுகள் கடந்த ஏப்ரல் மாதம் 22 முதல் 27 ஆம் திகதி வரை இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தின் Family Planning







Association of Srilanka (FPASL) நைனாமடுவையிலுள்ள 'சிந்தன' பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்த நட்புவட்டம் மலேசியா, பிரிட்டன் மற்றும் இலங்கையைச் சேர்ந்த 100 சாரணியர்களையும் சாரணியத் தலைவிகளையும் அழைத்து வந்திருந்தது. எதிர்கால செயற்பாடுகளுக்கான கருத்துக்களை அறியும் வகையிலேயே இவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நட்பு வட்டத்தின் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண வைபவம் ஏப்ரல் 23 ஆம் திகதி நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக முன்னாள் சாரணியரும் இலங்கை டெலிகொம், தலைவருமான திருமதி லெய்ஸா டி சில்வா கலந்துகொண்டார். இந்நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றன. சாரணியர்களும் சாரணியத் தலைவிகளும் நட்புரீதியில் கைகோர்த்து செயற்பட்டனர்.

மலேசியாவிலிருந்து வந்திருந்த ஜொய்ஸ் என்னும் சாரணியும் பிரிட்டனில் இருந்து வந்திருந்த மிஷ் என்னும் சாரணியத் தலைவியும் இந்நிகழ்வில் கலந்து கொண்டதற்காக தமது பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இறுதி நாளன்று வில்பொத்தகம பிள்ளைகளால் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள், இந்நிகழ்வில் பங்குபற்றிய அனைவரினதும் உள்ளத்தைத் தொடக்கூடியதாக இருந்தன. இந்த நட்பு வட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு தொடர்கள், உரையாடல்கள் என்பன சாரணிய செயற்பாடுகளை மேலும் சிறப்பிக்கும் வகையிலான புதுப்புது கருத்துக்களை தெரிவிப்பதாக இருந்தன. மிக முக்கியமாக அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான பிரதிநிதிகள் மத்தியில் உள்ள நட்பை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த நூற்றாண்டு விழா நட்பு வட்டம் உதவி புரிந்துள்ளது. வித்தியாசமான கலாசாரங்கள் மூலம் அறிவைப் பங்கிடும் ஒரு நிகழ்வாக இது அமைந்தது என்று இலங்கை சாரணியத் தலைவிகளில் ஒருவரான பிரியந்தி கூறினார்.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3589

மு.முஸ்னி, தரம்-$8^{H}$, அல்-ஹிரா வித்., மட்டக்களப்பு.



அங்.இல: 3590

கி.சதுர்ஷன், தரம் - $8^{D}$, தமிழ் மத்.ம.வித்., வவுனியா.



அங்.இல: 3591

பு.டிலைக்சன், தரம் - 8, யா/கொ.இந்துக் கல்., கொக்குவில்.



அங்.இல: 3592

மு.மனாஸீர், தரம் - 10, ந.உ.அ.கல்., மூதூர்-01.



அங்.இல: 3593

மஷ்ரிபா நஸீம், தரம் - $9^{G}$, மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.



அங்.இல: 3594

ஜி.ஷாமிலா, தரம் - $11^{A}$, தெஹியோவிட த.ம.வித்., தெஹியோவிட.



அங்.இல: 3595

முபீஸ் அஹமட், தரம் - $6^{C}$, அந்-நூர் தே.பாட., வாழைச்சேனை.



அங்.இல: 3596

எம்.முஸாதிக், தரம் - $6^{A}$, அல்-அஷ்ஹர் வித்., வரிப்பதான்சேனை.



அங்.இல: 3597

அ.கோபிநாத், தரம் - $7^{E}$, யா/கொ. இந்துக் கல்., கொக்குவில்.



அங்.இல: 3598

கு.டிறோசன், தரம் - 9, புனித பத்திரிசியார் கல்., யாழ்ப்பாணம்.



அங்.இல: 3599

சி.சஜீபன், தரம் - $9^{B}$, புனித கென்றியரசர் கல்., இளவாலை.



அங்.இல: 3600

லோ.பானுகோபன், உயர் தரம், ஸ்ரீ பார்வதி ம.வித்., அரியாலை.

## துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம் | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)

சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron All Island Art Competition

விண்ணப்பப்படிவம் Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex : ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

| ........................ | ........................ | ........................ |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் Applicant's Signature | திகதி Date | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் Parents/Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron COLSTAR ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர் தலைவர்களுக்கான அடையாள அட்டை அணிவிக்கும் வைபவம் அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. வைபவத்திற்கு பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த தொழில் அதிபர் ஏ.எம். இபாஸத்துல்லாஹ், மாணவி பாத்திமா அனோப்புக்கு அடையாள அட்டை அணிவிப்பதையும் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களுடன் மாணவர் தலைவர்கள் இருப்பதையுமே படங்களில் காண்கிறீர்கள்.




அநுராதபுரம், நாச்சியா தீவைச் சேர்ந்த இர்ஷாத்-மர்ஜூனா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சிஹானி, இன்று (26.05.2010) தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



## ஓவியம் வரைவது எப்படி?



நீங்களும் ஓவியம் வரைய இலகுவான நடைமுறைகள்

அடுத்த வாரம் 'விஜய்'யில் எதிர்பாருங்கள்




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ராஜ் தீபநதி, தரம் - 11,
நு/கிளைன்லைன் த.வித்.,
அக்கரப்பத்தனை.



எம்.நாஸிக், தரம் - 1,
பெயின்டர் மெமோரியல் பாட.,
நுவரெலியா.



எம்.லபதீஸ், தரம் -$5^C$,
சவேரியார் ஆ.கல்.,
மன்னார்.



எஃப்.அஸ்ரா,
தரம் - $6^B$,
அலிகார் ம.வித்.,
கள்-எலிய.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### பூக்கூடை




என்.லிருப்தா, தரம் - 6,
சாந்த.மேரி ம.வித்., மதுகம.



ஏ.ஜெபினு, தரம் - $6^A$,
பத்ரிய்யா வித்., காத்தான்குடி.



எச்.ஃபாத்திமா, தரம் - $8^C$,
அல்-அதான் ம.வித்., பதுளை.




அஹமட் ஸுஹ்ரி,
தரம் - $7^A$, அல்-பதுரியா ம.வித்.,
கஹடோவிட.

### வெசக்



எம்.மில்ஹான், தரம் - $11^B$,
அல்-பஹ்ரியா மத்.கல்.,
பாணந்துறை.

### வானவில்



க.கோகுலவரதன், தரம் - $5^T$,
அசோகா வித்., கண்டி.



அ.அப்ரா,
தரம் - 4, ஸாஹிராக் கல்.,
திருகோணமலை.



அஸ்லுப் அஹமட், தரம் - $4^A$,
கமு/அல்-மனார் ம.கல்.,
மருதமுனை-02.

### மரம்



எஃப்.சஹானா, தரம் - $5^B$,
பாத்திமா மு.வித்., கண்டி.



எஃப்.அஸ்கா, தரம் - 1,
சுலைமானியா ம.வித்.,
ஹிரிம்புர.



இஸட்.ஸன்ஹா, தரம் - $1^A$,
அல்-அமீன் ம.கல்., பன்னல.

### தபால்காரன்



எம்.மௌஜூத், தரம் - $9^B$,
அந்-நாஸர் வித்., மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறவைநாகம் விதித்த நிபந்தனை

உள்ளே வந்த பறவை நாகம், ''ஆஹா.... மாமிச வாடை அடிக்கிறதே'' என்று உறுமியது.

''இல்லை மகனே, எப்படி இருக்கமுடியும். உலகம் முழுக்கச் சுற்றிக் கொண்டிருக்கும் நீதான் உன்னுடன் அந்த வாடையைக் கொண்டு வந்திருக்கிறாய்'' அவள் சுறுசுறுப்படைந்து உணவு பரிமாற ஏற்பாடு செய்தாள். அடுப்பிலிருந்து வறுத்த காளைமாடு ஒன்றும், வாளி நிறைய வைனும் எடுத்து வைத்தாள். பறவைநாகம் ஒரே மூச்சில் வைனையும் வறுத்த மாட்டு இறைச்சியையும் சாப்பிட்டுவிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தது.

''அம்மா பொழுது போக்குவதற்கு சீட்டு விளையாட விரும்புகிறேன்''

''சீட்டு விளையாடவும் பொழுது போக்கவும் யாரையாவது நான் கண்டுபிடிக்க முடியும். ஆனால், அவனுக்கு நீ தீங்கு செய்வாய் என்று அஞ்சுகின்றேன்''

''அவனை உள்ளே கூப்பிடுங்கள். அம்மா, பயப்படவேண்டாம். யாருக்கும் நான் தீங்கு செய்யமாட்டேன். ஏனெனில், சீட்டு விளையாடுவதற்காக நான் ஏங்கித் தவிக்கிறேன்''

''சரி, மகனே உன் வாக்கைக் காப்பாற்றவேண்டும் என்பதை நினைவில் கொள்'' என்று பதிலளித்த பாபா-யகா நிலவறை வாயிலை உயர்த்தினாள்.




''மேலே வா, வயதில் இளைய அறிவில் மூத்த இவானே, உன்னை உபசரிப்பவரை மதித்து நட, அவனுடன் சீட்டு விளையாடு'' மேசை முன்னால் இருந்தபோது பறவைநாகம் சொன்னது;

''நாம் விளையாடலாம். நினைவிருக்கட்டும். ஜெயித்தவன் தோற்றவனை உண்பான்'' அவர்கள் விளையாடத் தொடங்கினார்கள். இவானுக்கு பாபா-யகா உதவி செய்தாள். இதனால், காலைவாக்கில் ஆட்டத்தில் இவான் வெற்றி பெற்றான்.

பறவை நாகம் கெஞ்சுகின்ற பாவனையில் பேசியது; ''எங்களோடு இன்னும் சற்றுத் தங்கியிரு. அருமை இளைஞனே. நான் திரும்ப உன்னை வெல்ல முயல்வேன். இன்று இரவு நான் வீடு திரும்பும்போது நாம் மற்றொரு ஆட்டம் ஆடலாம்'' என்று கூறியது.

வயதில் இளைய அறிவில் மூத்த இவான் அயர்ந்து தூங்கி எழுந்து வயிறு நிறைய உண்டான். சூரியன் மறைந்தபோது பறவைநாகம் திரும்பி வந்தது. வறுத்த மாட்டு இறைச்சியையும் ஒன்றரை வாளி வைனையும் விழுங்கிவிட்டுச் சொன்னது;

''சரி, சரி இப்போது நாம் சீட்டு ஆடலாம். ஆடுவதற்காக உட்கார்ந்தபோது பறவைநாகம் அந்த இரவு முழுவதும் தூங்காததாலும் பகல் முழுக்க உலகைச் சுற்றியதாலும் சீக்கிரமே தூங்கி விழுந்தது. வயதில் இளைய அறிவில் மூத்த இவான் பாபா-யகாவின் உதவியோடு மீண்டும் வென்றான். பறவை நாகம் சொன்னது;

''இப்போது நான் ஒரு காரியமாகப் பறந்தாக வேண்டும். ஆனால், இன்று மாலையில் நாம் மூன்றாவது ஆட்டத்தை வைத்துக்கொள்ளலாம்''

வயதில் இளைய அறிவில் மூத்த இவான் நன்கு ஓய்வு எடுத்தான். பறவைநாகம் இரண்டு இரவுகளாகத் தூங்காததாலும் பகல் முழுவதும் உலகைச் சுற்றியதாலும் களைப் படைந்து வீடு திரும்பியது. வறுத்த மாட்டு இறைச்சியையும் இரு வாளி வைனையும் விழுங்கிவிட்டுத் தன் விருந்தினனை அழைத்தது;

''உட்கார் இளைஞனே. எனது அதிர்ஷ்டத்தைப் பார்ப்போம்'' ஆனால், அது மிகவும் களைப்பாகி தூங்கி விழுந்ததால் சீக்கிரமே இவான் மூன்றாவது முறையும் வென்றான். பறவைநாகம் நடுங்கி போய், பணிந்து நின்று கெஞ்சிக் கேட்டது;

''என்னைக் கொன்றுவிடாதே. இளைஞனே! நீ விரும்பும் எந்த வேலையையும் நான் செய்வேன்'' பின்னர் தன் தாய்க்கு முன்பு மண்டியிட்டு நின்று இவானிடம் தன்னை விட்டுவிடச் சொல்லுமாறு மன்றாடியது. உண்மையில் அதைத்தான் இவான் விரும்பினான்.

''சரி பறவை நாகமே. உன்னிடம் மூன்று ஆட்டங்கள் வென்றிருக்கிறேன். தானே வாசிக்கும் இசைக்கருவி, நடனமாடும் வாத்து, பாடும் பூனை ஆகியவற்றை நீ எனக்குத் தந்தால் அத்துடன் விஷயத்தை முடித்து விடலாம்'' என்றான்.

பறவை நாகம் மகிழ்வுடன் சிரித்தது. தனது விருந்தினனையும் தனது தாய் பாபா-யகாவையும் கட்டித் தழுவியது. ''நீ அவற்றை எடுத்துக் கொள். இன்னும் சிறந்தவற்றை என்னால் உனக்குத் தரமுடியும்'' என்று கத்தியது. பறவைநாகம் இவானுக்கு மிகப்பெரிய விருந்து வைத்தது. அவனை சகோதரன் என்று பறை சாற்றியது. அவனை வீட்டுக்குத் தூக்கிப் போகவும் முன்வந்தது.

''எதற்காக தானே வாசிக்கும் இசைக்கருவி, நடனமாடும் வாத்து, பாடும் பூனை இவற்றைத் தூக்கிக்கொண்டு நடக்கவேண்டும்? நீ விரும்பும் எந்த இடத்திற்கும் இமைக்கும் நேரத்தில் உன்னை நான் தூக்கிப் போகமுடியும்''

''அதுவும் சரிதான் மகனே. உன் விருந்தினனை உனது சித்தியிடம் எனது கடைசித் தங்கையிடம் கூட்டிப் போ. திரும்பிப் போகும்போது உனது மற்றொரு சித்தியையும் பார்க்க மறந்துவிடாதே. அவர்கள் உன்னைப் பார்த்து அதிக காலமாகிவிட்டது''

விருந்து முடிந்தது. வயதில் அறிவில் மூத்த இவான் தனது அதிசயங்களை எடுத்துக்கொண்டு, பாபா-யகாவிடம் பிரியாவிடை பெற்றான். பறவைநாகம் அவனைத் தூக்கிக்கொண்டு நீலவானில் அதிக உயரத்தில் பறந்தது. ஒருமணி நேரமாவதற்கு முன்பே, மூன்று சூனியக்காரிகளில் இளையவளது குடிசைக்கு அருகிலே கீழே இறங்கியது. பாபா-யகா வெளியே ஓடி வந்தாள். இவானையும் பறவை நாகத்தையும் பார்க்க அவள் பெரிதும் விரும்பினாள். வயதில் இளைய அறிவில் மூத்த இவான் நேரத்தை வீணாக்காது தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரைக்குச் சேணம் பூட்டி, பாபா-யகாவிடமும் பறவைநாகத்திடமும் விடைபெற்றுக் கொண்டு தனது நாட்டிற்குத் திரும்பினான்.

(தொடரும்....)

# திருடனுக்கு சிறுவனின் பாடம்

ஓர் ஊரில் ஏமாற்றுப் பேர்வழி ஒருவன் இருந்தான். அவன் பெயர் சாருகன். அவன் தன் கண்களில் தென்படும் சிறுசிறு பொருட்களை எல்லாம் திருடிவிடுவான். ஒருநாள், தெரு வழியாக அவன் நடந்து சென்று கொண்டிருந்தான். அது பிற்பகல் நேரமாகையால் தெருவில் எவ்வித மக்கள் நடமாட்டமும் இல்லை. அப்போது தெருவின் ஓரத்தில் ஒரு தையற்கடை இருப்பதைப் பார்த்தான்.

''கடையில் யாருப்பா?'' என்று குரல் கொடுத்தான். கடையில் பொத்தான் தைத்துக்கொண்டிருந்த 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் நிமிர்ந்து பார்த்து, ''என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

''முதலாளி இல்லையா?''

''இல்லை! சாப்பிடப் போயிருக்கிறார்''

''பொக்கட்டில் பணம் இருக்கிறதா?''

''ஏன்?''

''ஒரு கோழி வைத்திருக்கிறேன். அருமையான கொழுத்த கோழி. பிரியாணி செய்து சாப்பிட்டால் பிரமாதமாக இருக்கும். வாங்கிக்கொள்கிறாயா?'' சிறுவன் யோசித்தான். பிரியாணி சாப்பிட்டு நீண்ட நாள் ஆகிவிட்டது. இந்தக் கோழியை வாங்கி அம்மாவிடம் கொடுத்தால், பிரியாணி செய்து தருவார். ஆசை தீர ஒரு பிடி பிடித்துவிடலாம். கோழியை ஏதோ அவசரத் தேவைக்காகத்தான் விற்க வந்திருக்கிறான்போல் இருக்கிறது. குறைந்த விலைக்குக் கொடுத்துவிடுவான் என நினைத்த சிறுவன், ''கோழி என்ன விலை?'' என்று கேட்டான்.

''ஐம்பது ரூபா'' என்றான் சாருகன்.

''எங்கே கோழியைக் காட்டு''

'' நீ முதலில் பணத்தை எடு''

''அதெல்லாம் முடியாது. முதலில் கோழியைக் காட்டு''

பையன் சிறுவனாக இருக்கிறான். அவனை ஏமாற்றி, கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு போய் விடலாம் என்று நினைத்துத்தான், கோழி என ரீல் விட்டான் சாருகன். ஆனால், சிறுவன் அவன் நினைத்த அளவுக்கு ஏமாளியாக இருக்கவில்லை.

''இதோ பார் பையா! இந்தக் கையில் பணத்தை வை; உனது கையில் கோழி இருக்கும்''

'' என் கையில் நீ கோழியை வைக்கும் அதேநேரத்தில், உன் கையில் நான் ரூபாவை வைக்கிறேன்''

அசந்து போனான் சாருகன்.

பையன் இவ்வளவு கில்லாடியாக இருப்பான் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. ஒரு வினாடி யோசித்தான்.

''சரி! உன் வழிக்கு நான் வருகிறேன். உனக்குக் கோழிதானே வேண்டும். தருகிறேன் அது எப்படியிருந்தாலும் கேள்வி கேட்காமல் வாங்கிக்கொள்ள வேண்டும்''

''சரி!''

கீழே கிடந்த ஒரு துண்டுத்தாளை எடுத்து கோழி போல் ஒரு படத்தை வரைந்தான் சாருகன். ''இந்தா கோழி... பணத்தை எடு!'' என்று பையனிடம் கொடுத்தான்.


''கோழி படம் கோழியாகிவிடுமா?''

''சொன்ன சொல் மாறக்கூடாது. எப்படியிருந்தாலும் கோழியை வாங்கிக்கொள்கிறேன் என்று வாக்குறுதி அளித்திருக்கிறாய்'' என்று மிரட்டினான் சாருகன்.

சிறுவன் சற்று யோசித்தான். பின்னர் அருகில் கிடந்த ஒரு துண்டுத்தாளை எடுத்து, ஐம்பது ரூபா என்று அதில் எழுதினான். ''இந்தா ரூபா'' என்று சாருகனிடம் நீட்டினான்.

அதைக் கண்ட சாருகனின் முகம் தொங்கிப் போய்விட்டது. ''ஏனப்பா! எருமை மாடு மாதிரி இருக்கே? இப்படி ஒரு பிழைப்பா? ஏதாவது வேலை வெட்டி பார்த்துப் பிழைக்கிறது. உன் வயசில் எனக்குப் பாதிதான் இருக்கும். நான் உழைச்சுப் பிழைக்க வில்லையா?'' என்று கேட்டான் சிறுவன்.

அவமானத்தால் முகம் சுண்டிக் கறுத்தது. அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டான் சாருகன். ஒரு சிறுவனே இப்படி ஒரு கேள்விகேட்ட பின்னர் திருடிப் பிழைப்பது கேவலமாகப்பட்டதால், இனி உழைத்து வாழ்வது என்று முடிவு செய்தான் சாருகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் பணிப்பாளருக்கும் கமலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| කමල්: | ආයුබෝවන් මහත්මයා. |
| | ஆயுபோவன் மஹத்மயா. |
| கமல்: | வணக்கம் ஐயா. |
| අධ්‍යක්ෂ: | ආයුබෝවන් කමල් වාඩිවෙන්න. අද ඔයාගේ අන්තිම දවස නේද? |
| | ஆயுபோவன் கமல் வாடிவென்ன. அத ஒயாகே அந்திம தவச நேத? |
| பணிப்பாளர்: | வணக்கம் கமல் உட்காருங்கள். இன்று உங்களுடைய கடைசி நாள் அல்லவா? |
| කමල්: | ඔව් සර්. මම සර්ට කියල යන්න ආවේ. |
| | ஒவ் சேர். மம சேர்ட கியல யன்ன ஆவே. |
| கமல்: | ஆம் ஐயா. தங்களுக்கு சொல்லிவிட்டுப் போக வந்தேன். |
| අධ්‍යක්ෂ: | කමල්ට එහේ ඉන්න තැනක් ලැබුණාද? |
| | கமல்ட எஹே இன்ன தெனக் லெபுனாத? |
| பணிப்பாளர்: | கமலுக்கு அங்கே தங்குவதற்கு இடமொன்று கிடைத்ததா? |
| කමල්: | ඔව් සර්. මම පොඩි ගෙයක් කුලියට ගත්තා. |
| | ஒவ் சேர். மம பொடி கெயக் குலியட கத்தா. |
| கமல்: | ஆம் ஐயா. நான் ஒரு சிறிய வீடு வாடகைக்கு எடுத்துள்ளேன். |
| අධ්‍යක්ෂ: | ඇයි ගෙයක්ම ගත්තේ? |
| | எய் கெயக்ம கத்தே? |
| பணிப்பாளர்: | ஏன் ஒரு (முழு) வீட்டை எடுத்தீர்கள்? |
| කමල්: | මම අම්මාවත් එක්කගෙනම යනවා සර්. |
| | மம அம்மாவத் எக்ககெனம யனவா சேர். |
| கமல்: | நான் அம்மாவையும் அழைத்துப் போகிறேன் ஐயா. |
| අධ්‍යක්ෂ: | කමල්ට අම්මා විතර ද ඉන්නේ? |
| | கமல்ட அம்மா விதரத இன்னே? |
| பணிப்பாளர்: | கமலுக்கு அம்மா மட்டுமா இருக்கிறார்? |
| කමල්: | ඔව් සර්. |
| | ஒவ் சேர். |
| கமல்: | ஆம் ஐயா. |
| අධ්‍යක්ෂ: | ආ... එහෙනම් අම්මාව එක්කගෙන යන එක හොඳයි. කමල් ඔයාට මගේ සුභ පැතුම්. |
| | ஆ.... எஹெனம் அம்மாவ எக்ககென யன எக ஹொந்தய். கமல் ஒயாட மகே சுபபெதும். |
| பணிப்பாளர்: | ஆ... அப்படியென்றால் அம்மாவையும் கூட்டிக்கொண்டு போவதுதான் நல்லது. கமல் உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள். |
| කමල්: | ස්තූතියි සර්. |
| | ஸ்தூதிய் சேர். |
| கமல்: | நன்றி ஐயா. |

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.

உதாரணம்: சொல்லிவிட்டுப் போக வந்தேன்.
කියල යන්න ආවේ.

i. நான் ஒரு சிறிய வீடு வாடகைக்கு எடுத்துள்ளேன்.
........................................................................

ii. அம்மாவையும் அழைத்துப் போகிறேன்.
........................................................................

iii. உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள்.
........................................................................






'Will' சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களையும் மற்றும் 'going to' சகிதம் மூல வினைச் சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களையும் (Future Tense) மேலும் உதாரணங்களுடன் ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Ranjith will sit on the floor.
ரஞ்ஜித் தரையில் உட்காருவான்.
(Ranjith will sit - ரஞ்சித் உட்காருவான்)

(ஆ) Ranjith is going to sit on the floor.
ரஞ்ஜித் தரையில் உட்காரப் போகின்றான்.
(Ranjith is going to sit - ரஞ்ஜித் உட்காரப் போகின்றான்)

---

(இ) Lalitha will participate in that function.
லலிதா அந்த வைபவத்தில் பங்குபற்றுவாள்.
(Lalitha will participate - லலிதா பங்குபற்றுவாள்)

(ஈ) Lalitha is going to participate in that function.
லலிதா அந்த வைபவத்தில் பங்குபற்றப் போகின்றாள்.
(Lalitha is going to participate - லலிதா பங்குபற்றப் போகின்றாள்)

---

(உ) This cat will run into the kitchen.
இந்தப் பூனை சமையலறைக்குள் ஓடும்.
(This cat will run - இந்தப் பூனை ஓடும்)

(ஊ) This cat is going to run into the kitchen.
இந்தப் பூனை சமையலறைக்குள் ஓடப் போகின்றது.
(This cat is going to run - இந்தப் பூனை ஓடப் போகின்றது)

---

(அ) My brother will meet the manager.
எனது சகோதரன் முகாமையாளரைச் சந்திப்பான்.
(My brother will meet - எனது சகோதரன் சந்திப்பான்)

(ஆ) My brother is going to meet the manager.
எனது சகோதரன் முகாமையாளரைச் சந்திக்கப் போகின்றான்.
(My brother is going to meet - எனது சகோதரன் சந்திக்கப் போகின்றான்)

---

(இ) My sister will collect stamps.
எனது சகோதரி முத்திரைகள் சேகரிப்பாள்.
(My sister will collect - எனது சகோதரி சேகரிப்பாள்)

(ஈ) My sister is going to collect stamps.
எனது சகோதரி முத்திரைகள் சேகரிக்கப் போகின்றாள்.
(My sister is going to collect - எனது சகோதரி சேகரிக்கப் போகின்றாள்)

---

(உ) My father will decorate the hall.
எனது தந்தை அந்த மண்டபத்தை அலங்கரிப்பார்.
(My father will decorate - எனது தந்தை அலங்கரிப்பார்)

(ஊ) My father is going to decorate the hall.
எனது தந்தை அந்த மண்டபத்தை அலங்கரிக்கப் போகின்றார்.
(My father is going to decorate - எனது தந்தை அலங்கரிக்கப் போகின்றார்)

---

(எ) My mother will blame me.
எனது தாய் என்னைக் குறை கூறுவார்.
(My mother will blame - எனது தாய் குறை கூறுவார்)

(ஏ) My mother is going to blame me.
எனது தாய் என்னைக் குறை கூறப் போகின்றார்.
(My mother is going to blame - எனது தாய் குறை கூறப் போகின்றார்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# பிரிட்டன் தொழிற்கட்சித் தலைவராக மில்லிபேன்ட்



பிரிட்டனில் நடைபெற்ற தேர்தலில் கோர்டன் பிரவுன் தலைமையிலான தொழிற்கட்சி தோல்வியடைந்ததை அடுத்து, அக்கட்சியின் தலைவர் பதவியிலிருந்து கோர்டன் பிரவுன் பதவி விலகியுள்ளார். இதன் காரணமாக வெற்றிடமாகியுள்ள கட்சித் தலைவர் பதவிக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சரான டேவிட் மில்லிபேன்ட் போட்டியிட இருப்பதாக அறிவித்துள்ளார்.

கடந்த 27 வருடங்களாக தொழிற் கட்சியின் உறுப்பினராகத்தாம் இருந்து வருவதாகவும் கௌரவத்துடனும் பொறுப்புணர்வுடனும் கட்சியை முன்னோக்கி வழிநடத்திச் செல்லும் சக்தி தமக்கு இருப்பதாகவும் மில்லிபேன்ட் தெரிவித்துள்ளார். இருப்பினும், அவரது சகோதரர் ஒருவரும் இதே பதவிக்கு அவரை எதிர்த்துப் போட்டியிடவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் புகை கக்கிய 'கெட்லா'



ஐஸ்லாந்திலுள்ள 'கெட்லா' எரிமலை மீண்டும் சாம்பல் புகையை வெளியேற்றத் தொடங்கியமையால் ஐரோப்பாவில் சில விமான சேவைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக அயர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளில் பெருமளவில் இதன் பாதிப்பைக் காணமுடிந்தது.

மேற்படி, சாம்பல் புகையானது பிரிட்டனை நோக்கி நகர்வதாக அறிவிக்கப்பட்டதையடுத்தே பிரிட்டனின் விமான நிலையங்கள் சில தமது சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டன.

தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு இவ்வாறு சாம்பல் புகை வெளியேறக் கூடும் என்று கருதப்பட்டமையால், விமானப் பயணிகள் முன்கூட்டியே விமான நிலையத்துடன் தொடர்புகொண்டு விமானசேவையை உறுதிப்படுத்தியபின்னர் புறப்படுமாறு கேட்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# விண்வெளித்துறை பற்றிய தெளிவு இல்லாதவராம் ஒபாமா

## நீல் ஆம்ஸ்ட்ரோங் குற்றச்சாட்டு

விண்வெளி ஆராய்ச்சிகள் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு போதிய விளக்கம் கிடையாது என்று சந்திரனில் முதன்முதலாக காலடி எடுத்து வைத்த மனிதன் என்ற பெருமைக்குரிய நீல் ஆம்ஸ்ட்ரோங் தெரிவித்துள்ளார்.

விண்வெளி ஆராய்ச்சி நடவடிக்கைகள் பலவற்றை நிறுத்திக்கொள்ளுமாறு ஒபாமா தீர்மானித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே நீல் ஆம்ஸ்ட்ரோங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையின் வணிகத்துறை மற்றும் போக்குவரத்துக் கமிட்டியில் நடைபெற்ற





கலந்துரையாடலொன்றின்போது பிரமுகர்களுக்கு எதிரே முன்னோக்கி வந்தே ஆம்ஸ்ட்ரோங், இக்கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

'நாஸா' நிறுவனத்தின் அல்லது ஜனாதிபதியின் விண்வெளித்துறை ஆலோசகர்களின் கருத்துக்களைக் கேளாமலேயே ஒபாமா தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார் என்பதே நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் குற்றச்சாட்டாகும்.

## அற்லஸ் கேள்வி - 257

**கேள்வி:** பிரிட்டனின் தொழிற்கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிடும் முன்னாள் அமைச்சர் யார்?

**சரியான விடை........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 257, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 255 இன் சரியான விடை: ஹொரைசன்**

**பரிசு பெறுவோர்**

பாத்திமா அஸ்ரிபா ஹில்மி,
15/1, வலவ் வத்த, மாவனல்லை.

எஸ்.பிரசாந்தன்,
68/1C, லொவர் என்ட்ரூஸ் வீதி, கொழும்பு-15.

எஃப்.சஸ்னா,
235/56, ஜூசேவாஸ் மாவத்தை,
புத்தளம் வீதி, சிலாபம்.

# மாசடைதலைத் தவிர்க்கும் புதுவகைக் கார்



இன்றைய நாட்களில் அறிமுகமாகின்ற தயாரிப்புக்கள் பல சூழல் மாசடைதலைத் தவிர்க்கும் விதமான தயாரிப்புக்களாக இருந்து வருவதைக் காணமுடிகின்றது. அந்த வரிசையில் உலகப் புகழ் பெற்ற 'ஃபோர்ட் நிறுவனம்' 'ஃபோர்ட் ஸ்டார்ட்' என்ற புதுவகையான வாகனமொன்றை பீஜிங் மோட்டார் வாகனக் கண்காட்சியில் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனால், இது இலக்ட்ரோனிக் ரக வாகனமல்ல. வாயு (gas) சிலிண்டரைக் கொண்டு இயங்கக்கூடிய வாகனமாகும். இந்த கார் மூன்று வாயு சிலிண்டர்களை கொண்டு இயங்கும். இதனால், இதில் 'காபன்டயொக்சைட்' மிகவும் குறைவாகவே வெளிப்படுகின்றது.

இந்த வாகனத்தின் பாகங்களை மீள்சுழற்சி மூலம் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் அலுமினியம் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதும் இதன் இன்னுமொரு சிறப்பம்சமாகும். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இயக்கங்களும் இத்தகைய அறிமுகங்களை வரவேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ipad க்கு போட்டியாக we tab



ipad டெப்லட் கணினிக்கு சமாந்தரமாக we tab என்றவோர் கணினி சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இதற்கு we pad என்று பெயரிடப்பட்டிருந்த போதிலும் பின்னர் we tab என்று பெயர் மாற்றப்பட்டதாக ஜேர்மனியிலுள்ள இதன் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

ipad கணினியும் பாவனையில் உள்ள அதேசமயம் அதற்கு சமபோட்டியாகவே குறித்த we tab அறிமுகமாகியுள்ள நிலையில் அது விற்பனை சந்தையை வெற்றிகொள்ளும் என்றும் அதன் தயாரிப்பு நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# நவீன கைக்கடிகாரம்





ADR Studio நிறுவனத்தினால் நவீன வசதிகளைக் கொண்ட புதிய வகையிலான கைக்கடிகாரமொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 'iWatch' என்று பெயரிடப்பட்டிருக்கும் இக்கைக்கடிகாரமானது 'இப்போது நேரத்தை மாற்றக்கூடிய காலமாகும்' என்ற சுலோகத்தை தாங்கியவாறே தயாரிக்கப்பட்டுள்ளது. நேரத்தை மட்டுமன்றி இன்னும் பல நவீன பயன்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதே இதன் சிறப்பம்சமாகும்.

இதில் Bluetooth-வசதியுள்ளமையால் ipad மற்றும் iphone ஆகியவற்றுடன் இலகுவாக இணையக் கூடிய வசதிகளையும் இது கொண்டுள்ளது. மேலும், காலநிலையை அறிவிக்கும் கட்டமைப்பு, உலகம் பூராவும் நடைபெறுகின்ற நிகழ்வுகளை செய்திகளாக வழங்கக்கூடியவாறு RSS வசதிகளும் இதில் உள்ளன. இவ்வாறு பல்வேறுபட்ட வசதிகளைக்கொண்டுள்ள இந்த கைக்கடிகாரத்தின் பட்டியானது பல்வேறு வகையிலான நிறங்களைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியின் ஆரம்பம்

**உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறுவதற்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. அதாவது, எதிர்வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை தென்ஆபிரிக்காவில் இம்முறை 19 ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதுவரை நடந்துள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் பிரேஸில் 5 தடவைகளும், இத்தாலி 4 தடவைகளும், ஜேர்மனி 3 தடவைகளும், ஆர்ஜன்டீனா 2 தடவைகளும், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தலா ஒரு தடவையும் உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்டுள்ளன.**

## ஆரம்பம்

1904 ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் உருவாக்கப்பட்டது. அந்த வருடம் தான் உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கான திட்டமும் வகுக்கப்பட்டது. எனினும், 1920 ஆம் ஆண்டே அதற்கான உரிய ஒத்துழைப்புக்கள் கிடைத்தன.

## ஒலிம்பிக் போட்டியில்

1924 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின்போதே கால்பந்தாட்டப் போட்டியானது மிகவும் பிரபல்யத்தை அடைந்தது. ஒலிம்பிக் போட்டியில் கால்பந்தாட்டப் போட்டியும் ஓர் அங்கமாக இருந்தமையால் உருகுவே, சுவிட்ஸர்லாந்து நாடுகளுக்கிடையே நடைபெற்ற ஒலிம்பிக் கால்பந்தாட்டப் போட்டியை ரசிப்பதற்கு 40,000 இற்கும் மேற்பட்ட ரசிகர்களால் அரங்கம் நிரம்பி வழிந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும், அந்தக் காலகட்டத்தில் தொழில்சார்ந்த கால்பந்தாட்ட வீரர்கள் ஒலிம்பிக் கால்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனவே, இவர்களைத் தவிர்ந்த வீரர்களே இப்போட்டிகளில் கலந்து கொள்ள முடிந்தது.

ஆகையால், சகல தரப்பு வீரர்களும் கலந்து கொள்ளும்விதமான போட்டியொன்றை நடத்துவதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதையடுத்து, இதுகுறித்து கால்பந்தாட்ட சம்மேளனம் நடவடிக்கைகளில் இறங்கியது. அதனையடுத்து, 1927 ஆம் ஆண்டு ஒன்றுகூடி கலந்துரையாடிய சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன உறுப்பினர்கள் 1930 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியொன்றை நடத்துவதற்கு தீர்மானித்தனர்.

மேற்படி, முதலாவது உலகக் கிண்ணப்போட்டியை தத்தமது நாடுகளில் நடத்துவதற்கு பல நாடுகள் முன்வந்தன. குறிப்பாக இத்தாலி, ஒல்லாந்து, ஸ்பெய்ன், ஸ்வீடன்,உருகுவே ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம். எனினும், இப்போட்டியை நடத்துவதாயின் புதிய மைதானத்தையும் அரங்கத்தையும் அமைக்க வேண்டியதுடன் போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து வீரர்களுக்குமான போக்குவரத்துச் செலவுகள் உட்பட தங்குமிட வசதிகள் அனைத்தையும் போட்டியை நடத்தும் நாடே பொறுப்பேற்கவேண்டும் என்று கூறப்பட்டமையால், உருகுவே நாடு மாத்திரமே அனைத்தையும் பொறுப்பேற்க முன்வந்தது. எனவே, முதலாவது உலகக் கிண்ணப்போட்டியை உருகுவே நாட்டில் நடத்துவதற்கு ஏகமனதாக அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மேற்படி போட்டியில் கலந்து கொள்வதற்கு தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த 7 நாடுகள் மெக்ஸிக்கோ மற்றும் ஐக்கிய அமெரிக்கா நாடுகளும் சம்மதம் தெரிவித்தன. பின்னர் பிரான்ஸ், பெல்ஜியம் உட்பட இதர ஐரோப்பிய நாடுகளும் இதில் இணைந்து கொண்டன.

## கப்பல் புறப்பாடு

1930 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி ஸ்பெய்னின் பெர்ஸிலோனா துறைமுகத்திலிருந்து 'எஸ்.எஸ். கௌன்ட் வேர்ல்ட்' என்ற கப்பலில் ஒருபிரிவு நாட்டினர் உருகுவே நோக்கிப் பயணித்தனர். இந்த கப்பலில்தான் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் யுல்ஸ் ரிமேயும் பயணித்ததுடன், உலகக் கிண்ணத்தை வெற்றிகொள்ளும் அணிக்கான வெற்றிக்கிண்ணமும் இந்த கப்பலில்தான் கொண்டு செல்லப்பட்டது. குறித்த கப்பல் ஜூலை மாதம் 4 ஆம் திகதி உருகுவே நாட்டைச் சென்றடைந்தபோது 10,000 இற்கும் மேற்பட்ட ரசிகர்கள் அவர்களை வரவேற்கக் காத்திருந்தனர்.




## உலகக் கிண்ண கால்பந்தாட்ட செம்பியன்கள்

**உலகக்கிண்ண கால்பந்தாட்டப்போட்டிகளில் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இதுவரை 11 நாடுகளுக்கே கிடைத்துள்ளது. இதில் உலகக் கிண்ணத்தை 7 நாடுகள் மாத்திரமே வெற்றிக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.**

பிரேஸில் 5 தடவைகள் வெற்றி கொண்டுள்ளது · இத்தாலி 4 · ஜேர்மனி 3 · ஆர்ஜன்டீனா 2 · உருகுவே 2 · இங்கிலாந்து 1 · பிரான்ஸ் 1




| | |
|---|---|
| 1930 - உருகுவே 4-2 ஆர்ஜன்டீனா | ★ போட்டி நடந்த நாடு - உருகுவே |
| 1934 - இத்தாலி 2-1 செக்கோஸ்லாவக்கியா | ★ இத்தாலி |
| 1938 - இத்தாலி 4-2 ஹங்கேரி | ★ பிரான்ஸ் |
| 1950 - உருகுவே 2-1 பிரேஸில் | ★ பிரேஸில் |
| 1954 - மே.ஜேர்மனி 3-2 ஹங்கேரி | ★ சுவிட்சர்லாந்து |
| 1958 - பிரேஸில் 5-2 ஸ்வீடன் | ★ ஸ்வீடன் |
| 1962 - பிரேஸில் 3-1 செக்கோஸ்லாவக்கியா | ★ சிலி |
| 1966 - இங்கிலாந்து 4-2 மே.ஜேர்மனி | ★ இங்கிலாந்து |
| 1970 - பிரேஸில் 4-1 இத்தாலி | ★ மெக்ஸிக்கோ |
| 1974 - மே.ஜேர்மனி 2-1 நெதர்லாந்து | ★ ஜேர்மனி |
| 1978 - ஆர்ஜன்டீனா 3-1 நெதர்லாந்து | ★ ஆர்ஜன்டீனா |
| 1982 - இத்தாலி 3-1 மே.ஜேர்மனி | ★ ஸ்பெய்ன் |
| 1986 - ஆர்ஜன்டீனா 3-2 மே.ஜேர்மனி | ★ மெக்ஸிக்கோ |
| 1990 - மே.ஜேர்மனி 1-0 ஆர்ஜன்டீனா | ★ இத்தாலி |
| 1994 - பிரேஸில் 0-0 இத்தாலி (தண்டனைக் கோல் 3-2) | ★ அமெரிக்கா |
| 1998 - பிரான்ஸ் 3-0 பிரேஸில் | ★ பிரான்ஸ் |
| 2002 - பிரேஸில் 2-0 ஜேர்மனி | ★ கொரியா/ஜப்பான் |
| 2006 - இத்தாலி 1-1 பிரான்ஸ் (தண்டனைக் கோல் 5-3) | ★ ஜேர்மனி |



1974 ஆம் ஆண்டிலிருந்து பிரேஸிலினால் அடுத்தடுத்து மூன்று தடவைகள் உலகக்கிண்ணம் வெற்றிகொள்ளப்பட்டமையால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'யூல்ஸ் ரிமே' கிண்ணம்

## குழுக்கள் பிரித்தல்

நான்கு குழுக்கள் பிரிக்கப்பட்டு அதில் ஒவ்வொரு குழுவிலும் தலா மூன்று அணிகள் வீதம் சேர்க்கப்பட்டன. மீதமாக இருந்த ஓர் அணி முதலாவது குழுவில் மேலதிக நான்காவது அணியாக சேர்க்கப்பட்டிருந்தது. அதன்படி முதலாவது உலகக் கிண்ணப்போட்டிகளில் மொத்தமாக 13 அணிகள் போட்டியிட்டன.

காலஅட்டவணைக்கு அமைய வரலாற்று முக்கியத்துவமிக்க முதலாவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியின் முதலாவது போட்டியில் பிரான்ஸ்-மெக்ஸிக்கோ ஆகிய நாடுகள் மோதின. இதில் முதலாவது கோலினை பெற்ற கௌரவத்தை பிரான்ஸின் லூஷன் லோரன்ஸ் பெற்றுக்கொண்டதுடன் 4-1 என்ற கோல் கணக்கில் இப்போட்டியில் பிரான்ஸ் வெற்றியீட்டியது.


அரையிறுதிப் போட்டியில் அர்ஜன்டீனா-அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையிலான போட்டியில் ஆர்ஜன்டீனா 6-1 என்ற கணக்கில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றதுடன், அடுத்த அரையிறுதிப் போட்டியில் உருகுவே யுகொஸ்லாவியா அணிகளுக்கிடையிலான போட்டியில் 6-1 என்ற கோல்கணக்கில் உருகுவே வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. இதன்படி, ஜூலை 30 ஆம் திகதி உருகுவே-ஆர்ஜன்டீனா ஆகிய அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இறுதிப்போட்டியை கண்டுகளிப்பதற்காக 80,000 இற்கும் மேற்பட்ட ரசிகர்கள் அரங்கில் குழுமியிருந்தனர். இறுதிப்போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் உருகுவே அணி வெற்றியீட்டியது. இதன்படி, முதலாவது உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய முதலாவது வீரர் என்ற பெருமையை உருகுவே அணியின் தலைவர் நஸாய் பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளி சென்ற நியூட்டனின் அப்பிள் மரம்



பொருட்களுக்கான புவியீர்ப்பு விசைக் கொள்ளளவை கண்டறிந்தவர், இங்கிலாந்து விஞ்ஞானி சேர்.ஐஸக் நியூட்டன் ஆவார். இவர் ஓர் அப்பிள் மரத்தடியில் படுத்திருந்த போது, அந்த மரத்தில் இருந்த ஓர் அப்பிள் கீழே விழுந்ததை அடிப்படையாகக்கொண்டே அவர் இந்தக் கொள்கையை வெளியிட்டார்.

'மேலே எறியப்படும் பொருளொன்று புவியீர்ப்பு விசை காரணமாகவே கீழே வருகின்றது' என்றே அவரது கருத்து அமைந்திருந்தது. அன்று நியூட்டனுக்கு இந்தக் கொள்கையைப் போதித்த அப்பிள் மரம், இன்று வரை லண்டனில் உள்ள ஆவணக் காப்பகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கடந்த 14 ஆம் திகதி நாஸா நிறுவனத்தின் மற்றுமொரு செயற்றிட்டத்துக்காக விண்வெளிக்கு ஏவப்பட்ட 'அட்லாண்டிஸ்' விண்கலத்தில், குறித்த அப்பிள் மரத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட 4 அங்குலம் நீளமுடைய ஒரு பகுதி விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த மரத்துண்டையும் நியூட்டனின் புகைப் படத்தையும் எடுத்தபடி 6 விண்வெளி வீரர்கள் குறித்த விண்கலத்தில் பயணித்துள்ளனர்.

''விண்வெளியில் புவியீர்ப்பு விசை இல்லை என்பதால், அங்கு இந்த அப்பிள் மரத்துண்டு வீசப்பட்டால் அது கீழே விழாமல் அந்தரத்தில் மிதக்கும். எனவே, விண்வெளியில் நியூட்டனின் ஈர்ப்பு விசைக் கொள்கை செல்லுபடியற்றதாகிவிடும். இதனை அவருடைய புவியீர்ப்புக் கொள்கைக்கு ஏதுவாக விளங்கிய அப்பிள் மரத்துண்டை வைத்தே நிரூபிக்கப் போகின்றோம்'' என அதனை விண்வெளிக்கு எடுத்துச் சென்ற விண்வெளி வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த விண்வெளிப் பயணப் பணிகள் முடிந்ததும் அந்த மரத்துண்டும் நியூட்டனின் புகைப்படமும் லண்டன் ஆவணக் காப்பகத்தில் மீண்டும் ஒப்படைக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# செவ்வாயில் உயிரினம்?




செவ்வாயின் சல்பேட் படிவு




அண்மையில் செவ்வாய்க் கிரகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி அங்கு உயிர்கள் இருப்பதை நிரூபிக்கும் பல்வேறு சான்றுகளை நாஸா விண்வெளி முகவர் நிலைய விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி அக்கிரகத்தில் 'சல்பேட்' மூலகம் இருப்பதற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது அக்கிரகத்தில் நீர் இருப்பதற்கு சிறந்த ஆதாரமாகத் திகழ்கின்றது. நீர் இருப்பதன் விளைவாக அங்கு உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் நிலவுவதற்கு இது ஒரு வலுவான ஆதாரமென்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மத்தியதரைக் கடல் பகுதிகளில் இருந்து பெறப்பட்ட எச்சங்களில் அதிகளவு 'சல்பேட்' காணப்பட்டது. இந்த சல்பேட் செவ்வாய்க் கிரகத்திலும் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இதனுடன் மேற்கு அவுஸ்திரேலியாவின் ஏரிக்கரைப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட சில படங்களை ஒத்த செவ்வாயின் மேற்பரப்புப் படங்களை அண்மையில் நாஸா வெளியிட்டிருந்தது. இவையனைத்தும் தமக்குப் பெரும் வியப்பை அளித்துள்ளது என விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.




# வேற்றுக்கிரக வாசிகளின் தொடர்பு பேராபத்தை விளைவிக்கலாம்!

## பேராசிரியர் ஸ்டீபன் ஹவ்கிங் எச்சரிக்கை



வேற்றுக்கிரகங்களில் உயிரினங்கள் வாழ்வது பெரும்பாலும் உறுதி என அமெரிக்க விண்வெளி பௌதீகவியலாளரான பேராசிரியர் ஸ்டீபன் ஹவ்கிங் கூறுகிறார். எனினும்,அந்த உயிரினங்களுடன் மனிதன் தொடர்பை ஏற்படுத்துவது பேராபத்தை விளைவிக்கலாம். எனவே, அத்தொடர்பைத் தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

உலகிற்கு வெளியேயுள்ள அந்த உயிரினங்கள் மதிநுட்பம் மிகுந்தவையாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். அதனால், அவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தினால் அவை பூமியில் உள்ள வளங்களைக் கைப்பற்றிப் பூமியை ஆக்கிரமிப்பதற்கும் வழிவகை செய்துவிடும் என்றும் அவர் கூறுகின்றார். 'டிஸ்கவரி' ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியின்போதே ஸ்டீபன் ஹவ்கிங் இவ்வாறு கூறினார்.

இந்த வேற்றுக்கிரக உயிரினங்கள் பூமிக்குள் பிரவேசிப்பது 15 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவை சென்றடைந்த பின்னர் அங்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு சமனான அழிவை உலக மக்களுக்கு ஏற்படுத்தலாம் என அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார். கொலம்பஸின் அமெரிக்க வருகையானது அமெரிக்காவின் பூர்வீக குடிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பதே வரலாற்று உண்மையாகும்.

அதன்படி, புவியின் அமைவிடத்தைச் சுட்டிக்காட்டும் வரைபடங்கள், மனித உருவங்கள் என்பனவற்றைக் கொண்ட விண்கலங்களை விண்வெளிக்கு அனுப்புவது, வேற்றுக்கிரக வாசிகளை அடையும் என்ற நம்பிக்கையில் வானொலிக் கதிர்களைப் பாய்ச்சுவது என்பன மனித குலத்திற்கு பேரழிவை ஏற்படுத்துவதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



தனது மகளுடன் ஸ்டீபன் ஹவ்கிங்

''கணித ரீதியான எனது கணிப்பின்படி, வேற்றுக்கிரக வாசிகள் இருப்பது சாத்தியமென்றே தோன்றுகிறது. ஆனால், அவை எவ்வாறு உள்ளன? என்பதைக் கண்டறிய முயற்சிப்பது மாபெரும் சவால் ஆகும். வேற்றுக்கிரக உயிரினங்கள் இலகுவான நுண்மூலக்கூற்று வடிவத்தைக் கொண்டவை'' என ஹவ்கிங் மேலும் கூறியுள்ளார்.

இதே கருத்தை வலியுறுத்தி அமெரிக்க மென்ச்செஸ்டர் பல்கலைக்கழக பேராசிரியர் பிரைன் கொக்ஸ் என்பவரும் செய்தி வெளியிட்டுள்ளார். அவரின் கருத்தின்படி, ''எமது ஞாயிற்றுத்தொகுதியில் ஏதோ ஓரிடத்தில் உயிரினம் இருப்பதற்கான சாத்தியம் அதிகம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B பகுதியிலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக

1

A B



## அறிவுக்கு விருந்து 259 விடைகள்

**போட்டி: 01**

* 'oi' மற்றும் 'oy' ஆகிய எழுத்துக்கள் உள்ள படங்களாவன : oil, poison, boy, toys, oyster.

**

| | |
|---|---|
| 1. noise | 5. employ |
| 2. destroy | 6. oink |
| 3. boil | 7. voice |
| 4. loyal | 8. voyage |

**போட்டி: 02**

1 - 4
2 - 7

**போட்டி: 05**

| | | |
|---|---|---|
| 01 - 3, | 05 - 2, | 08 - 1, |
| 02 - 10, | 06 - 7, | 09 - 8, |
| 03 - 6, | 07 - 4, | 10 - 5 |
| 04 - 9, | | |





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1,2,3,4,5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.06.02 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 262
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## பொருத்தமான விடையுடன் இணைக்க

3

| | |
|---|---|
| 3 × 1 | 21 |
| 5 × 2 | 36 |
| 7 × 3 | 10 |
| 9 × 4 | 30 |
| 6 × 5 | 35 |
| 0 × 6 | 3 |
| 5 × 7 | 0 |

## குழம்பியுள்ள குறளை ஒழுங்கமைக்க

5

அறிவிலார்/கல்லா தவர்/அறிவுடையார்/
அஃதுஅறி/ஆவது/அறிவார்

..............................................................

..............................................................

## முகங்களுடன் பொருந்தும் விலங்குகளுக்கு அருகில் அவற்றின் ஆங்கிலப் பெயரை எழுதுக

2




## பொதுப்பால் சொல்லில் கோடிடுக

4

1. குறவன்/விஞ்ஞானி/சிறுவர்கள்
2. நோயாளி/நண்பி/வாலிபன்
3. குருடி/குற்றவாளி/எஜமான்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 259 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஜெ.கிதுர்சிகன், தரம் - 6A,
ஸ்ரீ கோணேஸ்வரா இ.கல்., திருகோணமலை.

**போட்டி: 02**
இல்மா பைஸல், தரம் - 3,
அல்-ஹஸனியா ம.வித்., மக்கொனை.

**போட்டி: 03**
லாயிகா லாஹிர், தரம் - 6,
அல்-ஹிரா மு.ம.வித்., கிண்ணியா.

**போட்டி: 04**
எஃப்.ஸபா, ரேடியன்ட் பாலர் பாட., கல்பொக்க.

**போட்டி: 05**
எம்.அஃப்னாஸ், தரம் - 10B,
மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.

### பாராட்டுப் பெறுவோர்

* என்.நஸ்ரி ஹரிஸ், தரம்-8A, தெல்தொட்ட மு.மத்.கல்., தெல்தொட்ட.
* எஸ்.தனுசான், தரம்-7, உடபாகை த.வித்., பொரலங்கட.
* எச்.சித்தி ரஷியா, தரம்-7D, நுவரெலியா.
* கே.கவிதாஸ், தரம்-7, ஹாட்லிக் கல்., பருத்தித்துறை.
* ஆர்.அஹ்ஸன், தரம்-8, தாருல் உலூம் மு.ம.வித்., ரம்புக்கனை.
* எஸ்.பெஸில், தரம்-2A, மோதர தே.பாட., மொரட்டுவ.
* மு.றஜாயி, தரம்-6G, மத்திய ம.வித்., காத்தான்குடி-06.
* ஜெ.கரிஷ்மா, கம்பளை.
* ஈனோக் சஞ்ஜீவன், நுகேகொடை த.ம.வித்., நுகேகொடை.
* சு.மிதுஷன், தரம்-8D, ஸ்ரீ கோணேஸ்வரா இ.கல்., திருகோணமலை.




'புவி வெப்பம் அதிகரிக்கின்றது' எனும் கட்டுரை மிகச் சிறப்பானதாகவும் காலத்திற்குப் பொருத்தமானதாகவும் இருந்தது. புவி வெப்பமடைதல் பற்றிய கணிசமான தகவல்களைச் சுருக்கமானதாக விளக்கியிருந்தது அக்கட்டுரை.

*-அய்மா நிஃமத்துல்லா,*
*கமு/அல்-ஹம்றா வித்.,மருதமுனை.*

ஆக்கங்களைப் படித்த பின்னர், அதன் தரம் மேலும் ஒருபடி உயர்ந்திருப்பதைக் கண்டு பெருமிதம் அடைகிறேன். 'டியூஷன்' வகுப்புக்கள் அவசியமா? இல்லையா? என்பதற்கான விவாத மேடை, கைவண்ணங்கள், மாணவர் ஆக்கங்கள் என்பன இன்றைய மாணவர்களின் அனுபவ ரீதியான ஆற்றல்களையும் நாட்டங்களையும் வெளிப்படுத்துவதற்கான சிறந்த களத்தை 'விஜய்' வழங்கியுள்ளது என்பதை உணர்த்தின. எதிர்காலத்தில் சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு 'விஜய்' வழிவகுக்கும் என்பது தெளிவு.

*-ஸல்மா ஸில்மி, தரம்-11D, அல்-ஹம்றா ம.வித்., தர்ஹா நகர்.*

பக்கங்கள் 1-24 வரையும் உள்ள ஆக்கங்கள், கட்டுரைகள் மற்றும் அவற்றுக்கான தலைப்புக்கள், படங்கள் என அனைத்தும் பத்திரிகையின் தரத்தை உணர்த்தி நின்றன.

*க.அபிராமி, தரம்-6B, வேம்படி ம.உயர்தர பாட., யாழ்ப்பாணம்.*

கல்வி முகாமைத்துவம் என்ற கட்டுரையில் வெளியிடும் தகவல்கள் பிரமாதம். சிங்களம், ஆங்கிலம் கற்பிக்கும் பாடங்கள் வரவேற்கத்தக்கன.

*-ஆர்.ஃபர்வின்,*
*செந்நெல் கிராமம்-01,*
*சம்மாந்துறை.*




உள்நாட்டு-வெளிநாட்டு, விண்வெளி, விளையாட்டு என அத்தனை விடயங்களும் மாணவர்களாகிய நாம் பெற்றிருக்கும் வரமாகும். அத்துடன், சிறு நகைச்சுவைப் பகுதியும் இருப்பின் மிக நன்றாக இருக்கும்.

*-றிஸ்வானா ரவுப்,*
*ஹெம்மாதகம.*

இராமாயணம், மாணவர் பகுதி, வாரம் ஒரு நாடு, விவாத மேடை என்பன சிறப்பானவை. ஆனாலும், குறுக்கெழுத்துப் போட்டியை மிக விரைவில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*-எம்.ஜெயகலா, தரம்-11B, கிரேக் த.ம.வித்., பண்டாரவளை.*

விஜய்யில் பக்கம் 22 இல் வரும் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அப்பகுதியை வெட்டி எடுக்கும்போது 21 ஆம் பக்கத்தில் வரும் பகுதியின் பயனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இரு பக்கங்களும் மாணவர்களுக்கு முக்கியமானவையே. இந்த சிறிய சிக்கலைத் தவிர அனைத்தும் வரவேற்கத்தக்கவை.

*-அஸ்ரா ஹில்மி, வலவ் வத்த, மாவனல்லை.*

*✱ பக்கம் 22 இல் பிரசுரமாகும் பகுதிக்கான விடைகளை ஒரு தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள் அல்லது ஒரு தாளில் எழுதி, தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். தவிர, அந்தப் பகுதியை photo copy செய்து, அதில் விடைகளை எழுதி அனுப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்படும். (ஆ-ர்)*

நைட்டிங்கேல் சிறப்புக்கட்டுரை பல்வேறு தகவல்களை சுருக்கமாக விளக்கியிருந்தது. இருந்தாலும் சிறியதொரு தவறை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ICN அமைப்பின் தலைமைப் பதவியை வகிப்பவர் 'ஹிரோஹோ மினாமி' என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால், தற்போது அதன் தலைவராக 'ரோஸ்மேரி ப்ரியன்ட்' என்பவரே பதவி வகிக்கின்றார்.

*-க.ரூபினி, முதலாம் ஒழுங்கை, தெஹிவளை.*

*✱ தவறுக்கு வருந்துகின்றோம். பிழையை சுட்டிக்காட்டியமைக்கு மிக்க நன்றி. உங்கள் கருத்துக்களை தொடர்ந்தும் வரவேற்கின்றோம். (ஆ-ர்)*

இந்த இதழில் (26.05.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.06.2010.

அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகப்பெரிய பாறை மேற்கு அவுஸ்திரேலியாவின் கோல்டன் அவுட்பெக் (Golden outback) என்னுமிடத்தில் உள்ளது.

மவுண்ட் ஒகஸ்ட்டஸ் (Mount Augustus) என்னும் இந்தப் பாறை தேசிய பூங்காவாகவும் திகழ்கிறது. இந்தப் பாறை அவுஸ்திரேலியாவின் ரெட் சென்டர் (Red Centre) என்னுமிடத்தில் உள்ள உலுரு (Uluru) என்னும் பாறையைப் போல் இரண்டரை மடங்கு பெரியது என்றும் குறிப்பிடப்படுகிறது. சில

# உலகின் மிகப்பெரிய பாறை




சமயங்களில் தவறுதலாக இந்த 'உலுரு' பாறையே உலகின் மிகப்பெரிய பாறையென்றும் குறிப்பிடப்படுவதுண்டு.

இந்த 'மவுண்ட் ஒகஸ்ட்டஸ்' பாறை கடல் மட்டத்துக்கு மேல் 1105 மீட்டர் உயரமுடையது என்று கூறப்படுகிறது. இதன் உச்சி முகடு மட்டும் 8 கிலோமீற்றர் நீளமுடையது. இந்தப் பாறை 1000 மில்லியன் வருடங்களுக்கு மேல் பழைமையானதென்றும் தெரிவிக்கப்படுகிறது. இது அமைந்துள்ள மலையைச் சுற்றிலும் உயரத்திலும் மலையேறும் தடங்கள் அதிகமாக உள்ளன. அனுபவமும் தைரியமும் உள்ளவர்கள் மட்டுமே மலையின் உச்சிக்குச் செல்லும் முயற்சியில் ஈடுபடுவர்.

இதேவேளை, மத்திய அவுஸ்திரேலியாவில் உள்ள 'உலுரு' பாறை இங்குள்ள பூர்வீகக் குடிகளின் புனிதப் பகுதியாக வணங்கப்படுகிறது. இங்கு ஏராளமான நீர் ஊற்றுக்கள், மலைக்குகைகள், புராதன ஓவியங்கள் என்பன காணப்படுகின்றன.

# விகடத்துணுக்கு புத்தகங்கள்



படங்களுடன் உரைநடை, வசனம் இணைந்த விகடத்துணுக்குகளை அநேகமாக எல்லோருமே விரும்புவர். உலகெங்கும் விகடத்துணுக்குப் புத்தகங்கள் விரும்பிப் படிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, குழந்தைகளுக்கு விகடத்துணுக்குப் புத்தகம் படிப்பது என்றால் மிகுந்த ஆசையிருக்கும்.

ஜப்பானில் புத்தகக் கடைகள் எங்கும் 'கொமிக்ஸ்' புத்தகங்கள் குவிந்து கிடக்கும். ஜப்பானில் கொமிக்ஸ் புத்தகங்கள் படிப்பது ஒரு கலாசாரமாகவே உள்ளது. ஜப்பானிய கொமிக்ஸ் மற்றும் கார்ட்டூன் புத்தகங்கள் 'மங்கா' என்று அழைக்கப்படுகின்றன. 'கொமிக்கு' என்று குறிப்பிடப்படுவதும் உண்டு.

அந்நாட்டில் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்கும் கொமிக்ஸ் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அங்கு சாகசம், விளையாட்டு, புதிர்கள், வரலாற்றுக் கதைகள், நகைச்சுவை, அறிவியல் கற்பனை, வேடிக்கை, அதிசயம், திகில், வர்த்தகம்-தொழில் துறை; பெரியவர்களுக்கான விடயங்கள் என்று அனைத்துத் துறைகளிலும் கொமிக்ஸ் புத்தகங்கள் வெளியாகின்றன.

ஜப்பானிய 'மங்கா கொமிக்ஸுக்கு' நீண்ட வரலாறு உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து அது தொடங்குகிறது. ஜப்பானியக் கலையில் 'கொமிக்ஸ்' ஒரு முக்கிய விடயமாக இடம்பிடித்து வந்திருக்கிறது.

'மங்கா'வின் நவீன வடிவம் இரண்டாம் உலகப் போருக்குப் பின் தொடங்கியது. அதன்பின் ஜப்பானிய புத்தக வெளியீட்டுத் துறையில் இது தொடர்ந்து ஒரு முக்கிய இடம் பிடித்து வருகிறது.

தற்போது ஜப்பானில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் 'மங்கா-கொமிக்ஸ்' புகழ் பெறத் தொடங்கியிருக்கிறது. குறிப்பாக அமெரிக்கா, கனடா நாடுகளில் இவற்றுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. மங்காவின் பாதிப்பில் சீனா, தென் கொரியா, தைவான் போன்ற நாடுகளில் இவ்வாறான 'கொமிக்ஸ்' புத்தகங்கள் 'மாங்வா', 'மான்ஹுவா' என்னும் பெயர்களில் வெளியிடப்படுகின்றன.

பெரும்பாலும் 'மங்கா கொமிக்ஸ்' கறுப்பு-வெள்ளையில்தான் அச்சிடப்படுகிறது. ஆனால், முழுக்க முழுக்க வண்ணத்தில் வெளியிடப்படும் 'கொமிக்ஸ்' புத்தகங்களும் உண்டு.

ஜப்பானில் நாளிதழ், வார, மாத இதழ்களாகவும் 'கொமிக்ஸ்'கள் வெளியிடப்படுகின்றன. 'கொமிக்ஸ்' ஓவியர்கள் நல்ல வருவாய் ஈட்டுகின்றனர்.

வாசகர்கள் மத்தியில் பிரபலமாகும் 'கொமிக்ஸ்' தொடர்கள் தொடர்ந்து பல பதிப்புகள் வெளியிடப்படுகின்றன. தொலைக்காட்சி 'கார்ட்டூன்' தொடராகவும் ஒளிபரப்பப்படுகின்றன. 'ஸ்டார் வார்ஸ்' போன்ற பிரபலமான திரைப்படங்கள் 'கொமிக்ஸ்' புத்தகங்களாக வெளியிடப்படுவதும் உண்டு.



# பூமிக்கு கடவுளின் வருகை




கலுன்கன் (Galungan) என்னும் விடுமுறை காலப்பகுதியில் கடவுள் பூமிக்கு வருகை தருவதாக இந்தோனேஷியாவின் பாளி இன மக்களிடையே ஒரு நம்பிக்கை நிலவுகின்றது.

இந்த கலுன்கன் விடுமுறை காலம் 210 நாட்களுக்கு ஒருமுறை ஆரம்பித்து 10 நாட்கள் வரை நீடிக்கும். இக்காலப்பகுதியின் இறுதித் தினம் குனின்கன் (Kuningan) எனப்படுகிறது.

கலுன்கன் என்பதன் விளக்கம் என்னவெனில் (When the Dharma is Winning) தர்மம் வெல்லும் போது என்பதாகும். இக்காலப்பகுதியில் கடவுள் பூமிக்கு வருகை தந்து குனின்கன் தினமன்று திரும்பிச் செல்கிறார் என்பது இம்மக்களின் நம்பிக்கையாகும். இந்த விடுமுறை தினங்களை எல்லா பாளி மக்களும் விசேடமாக கொண்டாடுகின்றனர்.


இந்த கலுன்கன் காலப்பகுதியின்போது குடும்பங்களின் முன்னோர்கள் தாம் வாழ்ந்த பழைய வீடுகளுக்கு வருகை தருகின்றனராம். இவர்கள் மிகக் கண்ணியமான முறையில் வரவேற்கப்படவேண்டுமென்பதோடு, பிரார்த்தனைகள் நைவேத்தியங்கள் செய்யப்படவேண்டும். முன்னோர்களின் பிரேதங்கள் தகனம் செய்யப்படாமல் புதைக்கப்பட்டிருக்குமாயின் புதைகுழி அமைந்துள்ள இடங்களில் இந்த சடங்குகள் நடத்தப்படும்.

நாட்டின் வேறு பகுதிகளில் வாழ்ந்தாலும்கூட கலுன்கன் தினமன்று பாளி மக்கள் தம் மூதாதையர் வாழ்ந்த வீடுகளுக்கு வருகை தந்து இந்த மதச் சடங்குகளை நிறைவேற்றுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித பரிணாம வளர்ச்சியில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ள கண்டுபிடிப்பு



மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றி இதுவரைகாலம் நிலவி வந்த நம்பிக்கைகளில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் புதியதோர் கண்டுபிடிப்பொன்றை ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சிலர் மேற்கொண்டுள்ளனர். இதுபற்றி சர்வதேச தரம்மிக்க 'நேச்சர்' சஞ்சிகை தகவல்களை வெளியிட்டுள்ளது.

அத்தகவல்களின்படி, 2008 ஆம் ஆண்டு சைபீரிய நாட்டிலுள்ள 'டெனிஸோவா' என்ற குகையில் வைத்து மனித எலும்பின் ஒரு பாகத்தின் மச்சை கண்டெடுக்கப்பட்டது. இதுகுறித்து ஆராய்ந்த விஞ்ஞானிகள் முன்னைய காலத்தில் வாழ்ந்ததாக கருதப்படுகின்ற, மனிதனிலும் வித்தியாசப்பட்ட எனினும், மனித பரம்பரைக்கு உரிமைக்கோரக்கூடிய ஜீவ ராசியாக இது இருக்கலாம் என்று கருதுகின்றனர். எனவே, மனித பரிணாம வளர்ச்சியில் இதுகாலவரையில் நிலவி வந்த தத்துவங்களில் இது மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாகவும் கருதப்படுகின்றது.

Max Planck Institute for Evolutionary என்ற பெயரைக்கொண்ட ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவொன்றே இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.


அந்த விஞ்ஞானிகளின் கருத்தின்படி ஆரம்பத்தில் தாம் இந்த எலும்பு மச்சையைப் பார்த்து அது மனித எலும்பின் மச்சையாக இருக்காது என்றே நினைத்ததாகவும் எனினும் தொடர்ச்சியான ஆராய்ச்சிகளின் பலனாக அது மனிதக் குழந்தையொன்றின் சுண்டு விரலின் எலும்பு மச்சை என்பதை உறுதி செய்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இற்றைக்கு சுமார் 35,000 வருடங்களுக்கு முன்னர் பூமியில் புதையுண்டுப் போன எலும்பின் மச்சையாகவே இது இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.எனினும், இதன் டீ.என்.ஏ பரிசோதனை அறிக்கையின்படி, இதுவரை காலம் நாம் அறிந்து வைத்துள்ள ஆதிகால மனிதனையோ, நவீன கால மனிதனையோ ஒத்ததாக இது இருக்கவில்லையென்றும் அவற்றிலிருந்து வித்தியாசமான 'டீ.என்.ஏ' தன்மையை இந்த எலும்பு மச்சை காட்டியதாகவும், அநேகமாக அவற்றின் மரபணுக்களில் ஏற்பட்ட பக்றீரியா அல்லது வைரஸ் தாக்கத்தின் விளைவாகவே இவ்வாறு அவை வித்தியாசப்பட்டிருக்கலாம் என்றும் குறிப்பிடுகின்றனர்.

எனவே, இவை அனைத்தையும் வைத்து தீவிரமாக ஆராய்ச்சிகளை நடத்திய விஞ்ஞானிகள் சுமார் இரண்டு மில்லியன் (20 லட்சம்) வருடங்களுக்கு முன்னர் ஆபிரிக்காவில் பிறப்பெடுத்து உலகம் பூராவும் பரவி வாழ்ந்து வந்த 'இரெக்டஸ்' என்ற இனப் பரம்பலின் பரிணாமத்தையொட்டிய மனித உயிரினத்தின் எலும்பு மச்சையையே தாம் கண்டெடுத்திருப்பதாக ஊர்ஜிதம் செய்தனர்.

குரங்கின் பரிணாம வளர்ச்சியே மனிதன் என்ற கோட்பாட்டையும் தாண்டி அதற்கும் முந்திய ஒரு பரிணாம வளர்ச்சிக் காலகட்டமொன்று இருந்திருப்பதை இந்த ஆரம்ப ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

இருப்பினும், இந்த கண்டுபிடிப்பிற்கு இன்னமும் விஞ்ஞானப் பெயர் எதுவும் சூட்டப்படவில்லை. எனினும், இதற்கு 'டெனிஸோவா' என்று பொதுப்பெயரொன்றை சூட்டியுள்ளனர். இதன் மச்சை கண்டெடுக்கப்பட்ட 'டெனிஸோவா' என்ற குகையின் பெயரையே அவ்வாறு அவர்கள் சூட்டியுள்ளனர். இருப்பினும், இன்னும் சில மாதங்களில் இந்த புதிய கண்டுபிடிப்பான மனித பரிணாமத்திற்கு விஞ்ஞானப் பெயர் சூட்டப்படும் என்றும் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.



குரங்கிற்கும் முன்னதான ஒரு பரிணாம வளர்ச்சிப் பருவம் இருந்திருக்கலாமாம்!

# பாம்புத் தீவு

பாம்புகள் பெருகி வாழும் தீவு பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பசுபிக் சமுத்திரத்தில் உள்ள 'குஆம்' என்னும் தீவே அதுவாகும். இங்கு வாழும் பாம்புகள் பத்து அடி வரை நீளம் கொண்டவை. பழுப்பு நிறம் கொண்ட இப்பெரிய பாம்புகள் 12,000 வரை இத்தீவின் மரஞ்செடிகளுக்குள் மறைந்து வாழ்கின்றன. இந்தப் பெரிய பாம்புகளால் குஆம் தீவு மக்கள் பல்வேறு தொல்லைகளுக்கும் ஆளாகின்றார்கள்.



சிலநேரங்களில் மின்சாரத் தூண்களில் ஏறும் இப்பாம்புகளால் இத்தீவில் உள்ள பல பிரதேசங்களில் முழுமையாகவே மின்சாரம் தடைப்படுவதாக அத்தீவின் பிரதம வைத்தியசாலைப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாளரான ஜேம்ஸ் கிறிபின் என்பவர் கூறுகிறார்.

இப்பாம்புகளின் தொல்லை அதிகரித்ததால் அத்தீவில் இவைகளை அழிக்கும் போட்டியொன்று நடத்தப்பட்டது. அதிகமாகப் பாம்புகளைக் கொல்பவருக்கு 'பிக்அப்' வாகனமொன்றைப் பரிசளிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.





எனினும், போட்டியில் கலந்துகொண்டோர் 1200 பாம்புகளை மட்டுமே கொன்றனர். ஆக பத்தில் ஒரு பங்கு பாம்புகள்தான் கொல்லப்பட்டன. ஏனைய ஒன்பது வீதமும் விஷயமறிந்து ஓடி ஒளிந்து பின் மீண்டும் பல்கிப் பெருகின. தமக்கு ஆபத்து ஏற்படப்போகிறது என்பதை முன்கூட்டியே அவை அறிந்துகொண்டு எவ்வாறு தப்பின என்பது குறித்து உயிரியல் விஞ்ஞானிகள் ஆச்சரியப்படுகின்றனர்.

பறவைகளும் சின்னஞ்சிறு மிருகங்களும் அவற்றின் ஆகாரமென்பதால் அத்தீவில் பறவைகள் சிறுமிருகங்கள் யாவும் இல்லாதொழிந்த[illegible] அவை வயது வந்தோரைத் தீண்டினால் அவ்வளவாக விஷம் ஏறுவதில்லை. எனினும், குழந்தைகளைத் தீண்டினால் மூச்சுக்குழாய் பாதிக்கப்படலாம் என வைத்தியர்கள் கூறுகின்றனர். இரண்டாம் உலக யுத்த காலம் வரை குஆம் தீவில் இப்பாம்புகள் இருக்கவில்லை. ஆஸ்திரேலிய நியூகினிய யுத்தக் கப்பல்களிலிருந்து இறக்கப்பட்ட பொருட்களிலிருந்தே இவை இத்தீவில் பரவியிருக்கலாம் எனக் கருதுகின்றனர் உயிரியல் விஞ்ஞானிகள்.

ஏ.ஜே.எம்.நிழாம்

'இராமாயணம்'
சித்திரத் தொடர் அடுத்துவரும் வாரங்களில் தொடரும்

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010,மே மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 26, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org